கோவில் தேவைகளுக்கான
குடை, கொடி,
ஆலவட்டம், வாகுமாலை
என்பவற்றுக்கு

ஞானம்
ஆடையகம்

54, சோதியா தெரு,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

பட்டு, பருத்திப் புடைவைகள்
மற்றும் றெடிமேட்
ஆடைகளுக்கும் சிறந்த
ஸ்தாபனம்

ஞானம்
ஆடையகம்

54,சோதியா தெரு
யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 18 திங்கட்கிழமை (01 - 05 1995) UTHAYAN A LiveLy National Tamil Daily கதிர் 155

கொழும்பில் புலிகள் இன்று தாக்கலாமெனபீதி

தலைநகர் எங்கும் தீவிர பாதுகாப்பு ஏற்பாடு!

கொழும்பில் பதற்றம்

இரு விமானங்கள் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் நேற்று பதற்றம் நிலவியதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது.

கொழும்பு நகர் மற்றும் வெள்ளவத்தை, தெஹிவளைப் பகுதிகளில் தமிழர்கள் தாக்கப்படலாம் என்ற அச்சம் நிலவியதாகவும் —

தமிழர் வீதிகளில் குறைவாகவே காணப்பட்டதாகவும் —

தமிழர்களுக்கு சொந்தமான வியாபார நிலையங்கள் பல திறக்கப்படவில்லை என்றும் —

கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

ஆயுதம் தாங்கிய பொலிஸார் சந்திகள் தோறும் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

விமானம் வீழ்த்தப்பட்ட சம்பவம்

உயிரிழந்த அதிகாரிகள் 9 பேரின் விவரம் அறிவிப்பு

கொழும்பு, மே 1

நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளினால் 'அவ்ரோ' விமானம் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவத்தில் உயிரிழந்த ஏழு விமானப்படை அதிகாரிகளினதும் இரு இராணுவ அதிகாரிகளினதும் பெயர் விவரங்களைஸ்ரீலங்கா அரசு நேற்று வெளியிட்டது.

உயிரிழந்த ஏழு விமானப் படை வீரர்களும் வருமாறு:-

- ✶ விங் கொமாண்டார் எச். எம். எச் குணதிலக.
- ✶ விங் கொமாண்டார் ஜி. எஸ். விக்கிரமசிங்க.
- ✶ ஸ்குவார்டன் லீடர் டபிள்யூ கே வெயகம.
- ✶ பிளைட் லெப்டினென்ட் எச். பத்திரத்ன.
- ✶ பிளைட் லெப்டினன்ட் எஸ். பி. எஸ். பெரினாண்டோ.
- ✶ பிளையிங் ஒபிஸர் சி ஜெயசேகர.
- ✶ பிளையிங் ஒபிஸர் எம். அபேவிக்கிரம.

இராணுவ அதிகாரிகள் விவரம் வருமாறு:-

- ✶ மேஜர் விக்ரம் டயஸ்.
- ✶ இரண்டாவது லெப்டினன்ட் விஜே மெண்டிஸ்.

அமைதி பேண வேண்டுகிறது அரசு

கொழும்பு, மே 1

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தற்கொலைப் படைப்பிரிவைச் சேர்ந்த கரும்புலிகள் பலர் தலைநகர் கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாகவும —

மே தினமான இன்று அவர்கள் தலைநகரில் பல்வேறு தாக்குதல்களை நடத்தக்கூடும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் அஞ்சுவதாகவும் — செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்துள்ளன.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் அமைதியைப் பேணும்படி பொதுமக்களை ஸ்ரீலங்கா அரசு கேட்டிருக்கிறது.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் மே தின நிகழ்ச்சிகளின் போது ஜனாதிபதி பிரேமதாஸா கொல்லப்பட்டது போன்று இம்முறையும் தாக்குதல் நடக்கலாம் என அஞ்சப்படுவதாக பி. பி. ஸி குறிப்பிட்டது

கொழும்புக்கு குடிதண்ணீர் விநியோகத்தை வழங்கும் நீர்த்தேக்கங்களில் நஞ்சு கலக்கப்படக் கூடும் என்றும் அஞ்சப்பட்டது. இதனையடுத்து முக்கிய நீர்த் தேக்கங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

தலைநகருக்குள் வரும் வாகனங்களைச் சோதனையிடுவதற்காக மேலதிக சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் —

ரயில் நிலையங்களில் வந்திறங்குவோர் விசாரிக்கப்படுகின்றனர் என்றும் —

கட்டுநாயக்கா சர்வதேச

[6 ஆம் பக்கம் பார்க்க]

புலிகளின் எந்தத் தாக்குதலையும் சமாளிக்க அரச படை தயாராம்!

விடுதலைப் புலிகளின் எந்தத் தாக்குதலையும் சமாளிக்க அரசப் படைகள் தயாராக இருக்கின்றன.

—இவ்வாறு ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளிடமிருந்து வரும் எந்த அச்சுறுத்தலுக்கும் முகம் கொடுக்க முப்படைகள் தயாராக உள்ளன என்ற வெறும் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ள போதிலும்—

விமானங்களைச் சுட்டு வீழ்த்தும் ஆற்றல் தங்களுக்கு உள்ளது என விடுதலைப் புலிகள் நிரூபித்ததை அடுத்து எழுந்துள்ள நெருக்கடியை அரசு எப்படிச் சமாளிக்கப் போகின்றது என்ற விவரம் ஏதும் அதில் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [உ-3]

படை அதிகாரிகளுடன் சந்திரிகா ஆராய்வு

கொழும்பு, மே. 1

படையினரின் விமானங்கள் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட செய்தி கிடைத்ததை அடுத்து—

தமது வெளிநாட்டுப் பயணத்தை இடைநடுவில் சுருக்கிக் கொண்டு நேற்று முன்தினம் இரவு கொழும்பு திரும்பிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுப் பகல் முழுவதும் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரிகளுடன் தற்போதைய நிலைமை குறித்து கூடி ஆராய்ந்தார்.

முப்படைத் தளபதிகளுடன் நிலைமையை ஆராய்ந்த அவர், பின்னர் தேசிய பாதுகாப்புச் சபையையும் கூட்டினார்

அமைச்சரவையும் ஜனாதிபதி தலைமையில் நேற்று அவசர அவசரமாக— விசேடமாகக் கூடியது

இந்தக் கூட்டங்களில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து உத்தியோகபூர்வமாக ஏதும் அறிவிக்கப்படவில்லை.

அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் —

கடந்த சில நாட்களில் புலிகளின் தாக்குதலில் உயிரிழந்த படையினருக்கு அஞ்சலி செலுத்தியும் —

மேதினப் பேரணிகளை ரத்துச் செய்யக் கோரியும் —

அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டது. (உ)

வவுனியாவில் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், மே 1

வவுனியாப் பகுதியில் நேற்று ஸ்ரீலங்கா படையினர் கடும் ஷெல் தாக்குதலையும், துப்பாக்கி வேட்டுக்களையும் மேற்கொண்டனர் என "புலிகளின் குரல்" அறிவித்தது.

இதனால் வடக்கில் இருந்து தென் பகுதி நோக்கிச் சென்ற பயணிகள் தமது பயணத்தைக் கைவிட்டு திரும்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

மே தினப்பேரணியை அரசுத் தரப்பு ரத்து

ஆனால் கூட்டம் நடக்கும்

கொழும்பு, மே .1

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இடம் பெற்றுள்ள பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏனைய தோழமைக் கட்சிகளும் இன்று நடத்தவிருந்த தமது மேதினப் பேரணி ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறிவித்துள்ளன.

எனினும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் கொழும்பு நகர சபா மண்டபத்தில் திட்டமிட்டபடி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது (உ-6-3)

12 ஆண்டுகளின் பின்னர்

ஜே. வி. பியின் பேரணி கொழும்பில் நடைபெறும்

கொழும்பு, மே 1

ஜே. வி. பி தனது மேதினப் பேரணியை கடந்த 12 ஆண்டுகளின் பின்னர் இம்முறை தலைநகர் கொழும்பில் நடத்தவுள்ளது ஜே. வி. பி ஏற்பாடு செய்துள்ள பேரணி இன்று கொழும்பு ஹென்றி பிரட்ரிக் பூங்காவில் இருந்து ஆரம்பமாகும்.

மேதினப் பேரணிகளை ரத்துச் செய்யும்படி அரசு கோரியுள்ள போதிலும், தமது பேரணி திட்டமிட்டபடி நடைபெறும் என ஜே வி பி அறிவித்துள்ளது.

மேதினத்தை ஒட்டி ஜே வி. பியினர் தென்பகுதியில் பரவலாக பிரசாரக் கூட்டங்களை கடந்த வாரம் நடத்தினர். துண்டுப் பிரசுரங்கள் பலவும் வெளியிடப்பட்டன. (ஐ-14)

மேதினப் பேரணிகளை நடத்த வேண்டாம்! அரசு இறுதி நேரத்தில் அவசர கோரிக்கை

கூட்டங்களை மட்டும் நடத்த வேண்டுகோள்

கொழும்பு, மே 1

கடந்த வெள்ளியும், சனியும் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதில் உயிரிழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக மேதின ஊர்வலங்களை நடத்தவேண்டாம் என சகல அரசியல் கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும் அரசாங்கம் கேட்டுள்ளது.

நேற்று நடந்த அமைச்சரவையின் விசேட கூட்டத்தையடுத்து இந்த அவசர கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஊர்வலங்கள் நடத்தாமல் கூட்டங்களை மட்டுமே நடத்துமாறு அமைச்சரவை சகல கட்சிகளையும், தொழிற் சங்கங்களையும் கேட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது

அரசின் கோரிக்கையை ஏற்று மக்கள் ஐக்கிய முன்னணி தனது மேதினப் பேரணியையும், கூட்டத்தையும் ரத்துச்செய்துவிட்டது.

ஏனைய கட்சிகள் தங்களது மேதினப் பேரணிகளை ரத்துச் செய்

[6 ஆம் பக்கம் பார்க்க]

செல்லச்சந்நிதிப் பகுதியில் 'சுப்பசொனிக்' குண்டுவீச்சு!

6 பேர் படுகாயமுற்றனர்

வல்வெட்டித்துறை, மே 1

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சுற்றாடலில் உள்ள குடியிருப்புக்கள் மீது நேற்றுக்காலை 9-20 மணியளவில் இரு "சுப்பசொனிக்" விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் மூன்று வயதுச் சிறுமி உட்பட ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

திடீரென வந்த 'சுப்பசொனிக்' விமானங்கள் செல்லச்சந்நிதி ஆலயத்திற்கு முன்பாக கிழக்கு வீதிக்கு அண்மையில் உள்ள குடியிருப்பு ஒன்றின் மீது குண்டு வீசியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐவர் காயமுற்றனர்.

திருமதி துரைரட்ணம் அரியமலர் (வயது 49), தங்கவேல் தங்கவடிவேல் (வயது 32), திருமதி தங்கவடிவேல் ரஞ்சனி (வயது 28), அவர்களின் குழந்தை தங்கவடிவேல் ஆல்யா (வயது 3) ஆகியோரும் அவ்வேளை அங்கு வந்திருந்த திருமதி சிவானந்த ஐயர் யோகம்மா (வயது 40) என்பவரும் படுகாயமடைந்தனர். இவர்கள் பின்னர் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு அவசர அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டனர்.

மற்றுமொரு குண்டு அருகில் உள்ள வீட்டு வளவுக்குள் வீழ்ந்து வெடித்தது. இதனால் அங்கு கட்டப்பட்டிருந்த இரு மாடுகள் உடல் சிதறிப் பலியாகின.

மற்றொரு குண்டு தொண்

[6ஆம் பக்கம் பார்க்க]

மாலையிலும் வந்தது!

யாழ்ப்பாணம், மே 1

பருத்தித்துறை, தொண்டமானாறு பகுதிகளில் நேற்று மாலை 5 30 மணிக்கு "சுப்பசொனிக்" விமானம் ஒன்று பறந்தது.

"சுப்பசொனிக்" மாலையில் குண்டு வீச்சு எதனையும் நடத்தவில்லையாயினும் மக்களை மிரட்டும் பாணியில் பேரிரைச்சலுடன் பறந்ததால் மக்கள் பதற்றமுற்றனர்.

யாழ். குடாநாட்டில் இன்று மே நாள் எழுச்சிப் பேரணி!

யாழ்ப்பாணம், மே 1

உழைக்கும் மக்கள் தினமான மே நாள் இன்று யாழ்ப்பாணத்தில் எழுச்சி பொங்கக் கொண்டாடப்பட உள்ளது.

குடாநாட்டின் சகலபகுதிகளையும் சேர்ந்த மக்கள் இன்று நடைபெறும் மே நாளையொட்டிய மாபெரும் பேரணியில் கலந்து கொள்வர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் அவர்கள் ஒருமைப்பாட்டுடன் நிற்பதைப் பிரதிபலிக்கும் வகையில் இன்றைய பேரணி அமையும்.

இப்பேரணி மருதனார் மடம் சந்தியில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். பேரணியில் கலந்து கொள்வ[illegible] வட்ட ரீதியாக ஒதுக்கப்பட்ட இடங்களில் [illegible] கூடுவர். அங்கிருந்து கோட்ட ரீதியாக ஒதுக்கப்பட்ட இடங்களுக்கு வாகனங்களில் வருவர்.

கோட்ட ரீதியாக ஒதுக்கப் [illegible] சால பகுதிகளிலும் இருந்து

[illegible]

அரசுக்கு ராணுவத் தளபாட உதவிகள் உடன் வழங்க பல நாடுகள் தயாராம்!

'லங்காபுவத்' கூறுகின்றது

கொழும்பு, மே 1

விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு உதவ வெளிநாடுகள் பல முன்வந்திருப்பதாக "லங்கா புவத்" செய்திநிறுவனம் அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்காவின் அயல் நாடுகளான தெற்காசிய நாடுகள், அணிசேரா அங்கத்துவ நாடுகள், பல மேற்கு நாடுகள் ஆகியன இராணுவ உபகரணங்கள் உட்பட உடனடி உதவிகளை வழங்க முன்வந்திருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி "லங்கா புவத்" அறிவித்தது.

(உ-ச-3)

வாழைச்சேனை மோதலில் போராளி வீரமரணம்

யாழ்ப்பாணம், மே 1

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்றுக் காலை 9 மணி முதல் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைப்பு ஒன்றை நடத்தினர்.

சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப் புலிப்

[6ஆம் பக்கம் பார்க்க]

'கெல்ற்' வகுப்புக்கள் செவ்வாயன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 1

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான 'கெல்ற்' ஆங்கில வகுப்புகள் நாளை மறுதினம் மூன்றாம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் ஆரம்பமாகும்.

மேற்படி பாடசாலைகளுள் ஒன்றை மாணவர்கள் தமது வசதிக்கேற்ப தெரிவுசெய்து அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு சமுகமளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பாடசாலைகளில் 1994ஆம் ஆண்டில் கல்வி சார்ந்த இணைப்பாளர்களாகக் கடமையாற்றிய அனைவரையும் நாளை 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளரைச் சந்திக்குமாறு யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கேட்டுள்ளார். [க-7]

விஷமிகளின் வதந்தியால் மக்கள் இடம்பெயர்வு

சண்டிலிப்பாய், மே 1

பனிப்புலம், சாந்தை வடலியடைப்பு ஆகிய இடங்களிலுள்ள மக்கள் 29ஆம் திகதி சனிக்கிழமை நண்பகலில் ஸ்ரீலங்கா இராணுவம் முன்னேறி வருகின்றது என்ற வதந்தியினால் தங்கள் வீடு வாசல்களை விட்டு வெளியேறி தூர — பாதுகாப்பான இடங்களை நாடிச் சென்றனர்.

விஷமிகள் சிலர் இத்தவறான வதந்தியை பரப்பியதை அடுத்து இதனை நம்பிய மக்கள் பதற்றத்துடன் முக்கிய பொருள்களை பெட்டிகளிலும், உரப்பைகளிலும் கட்டிக்கொண்டு நடந்தும், சைக்கிள்களிலும் சங்கானை, சண்டிலிப்பாய், வட்டுக்கோட்டை பகுதியிலுள்ள பொது இடங்களுக்கும் உறவினர்கள் தெரிந்தவர்கள் வீடுகளுக்கும் சென்றதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. நண்பகலில் கடும் இடி முழக்கத்துடன் மழை பெய்துகொண்டிருந்தவேளையில் சில்லாலை, பண்டத்தரிப்பு, விளான் பகுதிகளில் ஷெல் தாக்குதல் சத்தங்களும் அடிக்கடி கேட்டதால் உண்மையில் இராணுவம் முன்னேறி வருகின்றது என்ற வதந்தியை நம்பிய இவர்கள் பிற்பகலில் மீண்டும் தங்கள் வீடுகளுக்கு திரும்பிச் சென்றனர்.

வீண் வதந்திகளை பரப்பிவிட்டு மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியவுடன் வீட்டுப் பொருள்களை திருடும் கபட எண்ணத்தில் இந்த விஷமிகள் இதுபோன்ற பொய் வதந்தியை பரப்பி வருவதாக அறியப்படுகின்றது. (க-135)

இ. போ. ச. மோசடிகள் குறித்து துரித விசாரணை

இலங்கை போக்குவரத்து சபையில் இடம் பெற்ற அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக இது வரையில் 14ஆயிரத்துக்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கென பிராந்திய ரீதியான குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவ்வப்பகுதி அதிகாரிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் இக்குழுக்கள் பிராந்திய போக்குவரத்து சபை அலுவலகங்களில் விசாரணைகளை மேற்கொள்ளும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக

மக்கள் போராட்டம் தமிழகத்தில் நடத்தப்படும்

எதிர்க்கட்சிகள் கூடித் தீர்மானம்

சென்னை, மே 1

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ராஜினாமாச் செய்ய வேண்டும் எனக்கோரி மக்கள் போராட்டத்தை ஆரம்பிக்க தமிழக எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

முன்னாள் இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி தலைமையில் கூடிய எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

இவ்விடயம் குறித்து முடிவு ஒன்றை எடுக்காமல் மத்திய அரசு தொடர்ந்தும் மௌனம் சாதிக்குமானால் அதற்கு எதிராக மக்கள் அபிப்பிராயத்தை ஒன்று திரட்டுவதற்கும் எதிர்க்கட்சிகள் முடிவு செய்துள்ளன.

இக்கூட்டத்தில் 13 கட்சிகள் பங்குபற்றின. (ஐ)

பரிசாரகர் பரீட்சை

சண்டிலிப்பாய், மே 1

பரிசாரகர்களாக (அற்றன்டன்) தெரிவு செய்யப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் தங்கள் மூன்று மாதகால பரிசாரகர் பயிற்சியை பூர்த்தி செய்துள்ள 48 பேருக்கு இதுவரை நடத்தப்படாமல் இருந்த எழுத்துப் பரீட்சை, செய்முறைப் பரீட்சை என்பன யாழ். சுகாதார திணைக்கள பிரதி மாகாண பணிப்பாளரின் அலுவலகத்தினால் நடத்தப்படவுள்ளது.

எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் செய்முறைப் பரீட்சை மறுநாள் 8 ஆம் திகதியும், 9 ஆம் திகதியும் யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் நடைபெறவுள்ளன. இப்பரீட்சைகளில் சித்தியடைபவர்கள் யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகளில் உள்ள பரிசாரகர்கள் வெற்றிடங்களுக்கு நியமனம் செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (க-135)

ஒக்லஹோமா குண்டு வெடிப்பு:

ஆபத்து காரணமாக மீட்பு பணி கைவிடப்படலாம்

இதுவரை 121 சடலங்கள் மீட்பு

நியுயோர்க், மே 1

அமெரிக்காவின் ஒக்லஹோமா நகரில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தின் மீட்பு பணிகள் ஆபத்தானதாக அமையும் பட்சத்தில் அதைக் கைவிட வேண்டி ஏற்படும் என்று மீட்பு பணி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இடிபாடுகளில் இருந்து இதுவரை 121 சடலங்களை மீட்பு பணியினர் மீட்டுள்ளனர்.

தொடர்ந்து 10ஆவது நாளாக மீட்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இரண்டு உறுதியற்ற கட்டடங்களில் மீட்பு வேலைகளை மேற்கொள்வது ஆபத்தானது என்று பொறியியலாளர்கள் எச்சரிக்கை தெரிவித்துள்ளனர்.

கட்டடத்தின் பிரதான இடிபாடுகள் உள்ள பகுதிகளுக்கு செல்வதற்கு 2 அல்லது மேலும் சில நாட்கள் செல்லலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

குண்டு வெடிப்பு தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள முதலாவது சந்தேக நபர் வளைகுடா யுத்தத்தில் ஈடுபட்ட ஒரு போர் வீரர் ஆவார்.

இரண்டாவது சந்தேக நபரை அமெரிக்க புலனாய்வாளர்கள் தேடி வருகின்றனர்.

அவர் இன்னொரு குண்டு வெடிப்பு தாக்குதலை மேற்கொள்ளலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது [ஐ-14]

ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 7.40 மணியளவில் வல்லைக் கடல்நீரேரி, பத்தைமேனிப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது இதனால் அச்சுவேலிப் பகுதியில் அன்றிரவு பதற்றம் நிலவியது மக்கள் பாதுகாப்புத் தேடி இரவில் இடம்பெயர்ந்தனர். [உ-11]

விமானம் விழுந்த இடத்தில் துர்நாற்றம் வீசுகின்றது

அச்சுவேலி, மே 1

கடந்த சனியன்று காலை விடுதலைப் புலிகளால் சுடப்பட்ட படையினரின் ''அவ்ரோ'' விமானம் வீழ்ந்து நொறுங்கிய இடத்தில் துர்நாற்றம் வீசுகின்றது. அங்கு சிதறிய சடலங்களின் எச்சங்களையும், சதைக் கழிவுகளையும் நாய்களும், காகங்களும் இரையாக்கி வருகின்றன.

விமானம் விழுந்து நொறுங்கிய நவக்கிரி பூவடி ஞானவைரவர் கோயில் பகுதியிலிருந்த மக்கள், அங்கு சிதறிய சடலங்களின் எச்சங்கள் அழுகி வீசுகின்ற துர்நாற்றம் காரணமாக அப்பகுதியை விட்டு இரவு வேளையில் இடம்பெயர்ந்து வேறிடத்தில் தங்குகின்றனர்.

இதனால் இரவு வேளையில் அப்பகுதியில் மயானச்சூழல் காணப்படுகின்றது. (உ-11)

தமிழர்கள் மீது படையினர் ஆரையம்பதியில் தாக்குதல்!

படை அதிகாரியிடம் முறைப்பாடு

மட்டக்களப்பு, மே 1

மட்டக்களப்பு பகுதியில் ஆரையம்பதி, மண்முனைத்துறை ஆகிய இடங்களில் தமிழர்கள் பலர் கடந்த வாரம் விசேட அதிரடிப் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் அடிக்கடி இவ்வாறு பொது மக்கள் தாக்கப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது

இச்சம்பவம் குறித்து மட்டு மாவட்ட தமிழ் எம். பி. ஒருவர் அம்பாறை— மட்டக்களப்பு மாவட்ட அதிரடிப் படை பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்துள்ளார். இத்தகைய தாக்குதல்களை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கோரியுள்ளார். [ஐ]

இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளில் திருட்டு!

சண்டிலிப்பாய், மே 1

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது பனிப்புலம் கிராம மக்கள் பதட்டமடைந்து திடீரென தங்கள் வீடு வாசல்களை விட்டு இடம் பெயர்ந்து சென்ற வேளையில் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டியுள்ளனர். பனிப்புலம், சாந்தை ஆகிய பகுதிகளிலுள்ள பல வீடுகளில் கோழிகளும் மற்றும் உடுபுடவைகள், வீட்டுப்பாவனைப் பொருள்கள் என்பனவும் திருட்டுப் போயுள்ளதாக அறியப்படுகின்றது. இரண்டு வீடுகளில் [illegible] பெட்டிகள், மற்றும் ஒருவீட்டில் பூட்டியிருந்த அறைக் கதவை உடைத்து அங்கிருந்த ரிவி, தொலைக்காட்சி பெட்டி, டெக் என்பனவும் திருடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (க-135)

ஆலயங்களில்

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான சங்காபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். பகல் அன்னதானம் இடம் பெறும். மாலை திருக்கல்யாண வைபவமும் சப்பரத்தில்சுவாமி வீதியுலாவும் இடம் பெறும். (க-89)

★ ★ ★

அளவெட்டி பெருமாக்கடவை ஸ்ரீ ஆதி துர்க்கை அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆசியுரையை அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி நிகழ்த்துவார். (க-135)

★ ★ ★

துன்னாலை மிந்திரன் கண்ணகை அம்பாள் கோயில் கும்பாபிஷேகதின மணவாளக் கோலவிழா 3 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

அன்றைபதினம் 1008 சங்காபிஷேகமும், சுவாமி சித்ருபானந்தாவின் விசேட சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (க-173)

★ ★ ★

அரியாலை ஸ்ரீஞான வைரவ சுவாமி கோயில் வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி புதன்கிழமை வரை நடைபெறும். (க-30)

★ ★ ★

பொலிகண்டி கந்தவனக் கடவை முருகன் கோயில் கார்த்திகை உற்சவத்தை ஒட்டி இன்று திங்கட்கிழமை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம கிளை ஸ்தாபனத்தில் பஜனை சிறப்பு வழிபாடுகள் என்பன இடம் பெறும்.]க-14]

சமூகவியல் நூல்கள் தமிழில் வெளிவர வேண்டும்

பல்கலைக்கழக துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம், மே 01

பல்கலைக்கழக மாணவர்களிடையே சமூகவியல் அறிவு போதியளவு வளரவில்லை. இந்தக் குறைபாட்டை நீக்க சமூகவியல் நூல்கள் கூடுதலாக வெளியிடப்பட வேண்டும்.''

திரு. க. சத்தியசீலன் எழுதிய ''இலங்கை அரசியலில் மொழியும் மதமும்'', ''இலங்கை இனப்பிரச்சினையின் பொருளாதார மூலங்கள்'' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்திய யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் க. குணரத்தினம் இவ்வாறு கூறினார்.

வெளியீட்டு விழா கடந்த மாதம் 6 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக சமூகவியல் மன்றத் தலைவர் திரு. ஆர். ரமேஸ் தலைமையில் நடைபெற்றது.

துணைவேந்தர் குணரத்தினம் மேலும் பேசுகையில்; திரு சத்தியசீலனின் இந்த இரண்டு நூல்களும் சமூகவியல் அறிவைப் பெற மாணவருக்கு உதவும் தன்மையானது எனவும் —

அவை தமிழர்களின் அரசியல் பொருளாதார நிலைப்பாடுகளையும் அவர்களுக்கு எதிராக அரசியல்வாதிகள் எத்தகைய சீர்குலைப்புகளைச் செய்தார்கள் என்பதையும் பல்வேறு தரவுகளுடன் எடுத்துக் காட்டுகின்றன எனவும் அவர் கூறினார்.

வைத்திய கலாநிதி நாதன் பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் எஸ். பாலகிருஷ்ணன், பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஆகியோரும் நூல் வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்தினார்கள்.

நூலின் முதல் பிரதிகளை கலைப்பீடாதிபதி பாலசுந்தரம்பிள்ளை பேராசிரியர் சண்முகதாஸ் ஆகியோரிடமிருந்து சமஸ்கிருதத் துறைத் தலைவர் பேராசிரியர் ப. சிவசாமி பல்கலைக்கழக பதிவாளர் திரு. பரமேஸ்வரன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். [க-111]

பாராட்டு விழா

மயிலணி, மே 1

இணுவில் என். ஆர். கோவிந்தசாமிப் பிள்ளையின் புதல்வர்கள் இரத்தினகுமார், வாகீஸ்வரன் ஆகியோர், சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோவிலில் பத்து வருட மங்கள இசைச்சேவையைப் பூர்த்தி செய்வதை முன்னிட்டு —

அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா இன்று ஆலயத்தில் நடைபெறும். இன்று மு. ப. 11 மணிக்கு நடைபெறும் இப்பாராட்டு விழாவில் நாதஸ்வர வித்துவான்கள் இருவருக்கும் பொற்பதக்கங்கள் சூட்டப்படும். (அ-89)

பாடசாலை சேவை

கடந்த சில காலமாகத் தடைப்பட்டிருந்த பாடசாலை வான் (VAN) சேவை அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க நாளை மறுதினம் (3-5-95) தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாதை:- அளவெட்டி, சண்டிலிப்பாய்
மானிப்பாய் ஊடாக உடுவில்
பாடசாலை.

தொடர்பு:- நா. ஜெனகன்
கல்வளை
சண்டிலிப்பாய். (சி/1128)

தற்சார்பு பொருண்மிய வளர்ச்சிக்கு நன்னீர் பாதுகாப்பு மிக அவசியம்

எந்த ஒரு நாட்டுக்கோ' பிரதேசத்திற்கோ, கிராமத்துக்கோ நீர்வளம் என்பது பிரதானமாகவே அமைகின்றது. நீரின்றி எந்தவொரு உயிரினமுமே வாழமுடியாது

ஆதி காலத்திலிருந்து நீரை மையமாக வைத்தே நாகரிகங்கள் உருவாகின. அதவாது நதிக்கரைகளிலே நாகரிகங்கள் உருப்பெற்றன. இத்தகைய நிலையில் எமது குடாநாட்டிலும் நீரின் தேவை என்பது அதிகரித்துக் கொண்டே வருகையில் நன்னீர் பாதுகாப்பு என்பது அவசியமாகின்றது.

தமிழீழத்தின் பொருளாதாரக் கொள்கை என்பது கைத்தொழிலையும் விவசாயத்தையும் மையமாகக் கொண்டே கட்டியெழுப்பப்படுவதனால் அதற்கு அடிப்படையான நீர்வளம் என்பது பாதுகாக்கப்பட வேண்டும்.

அந்த வகையிலே எமது குடாநாட்டு நீர்வளத்தை நோக்குவோமாயின் நீர்வளம் முற்றுமுழுதாக நிலக்கீழாகவே காணப்படுகின்றது.

யாழ். குடாநாட்டின் சரிவு நில அமைப்பினால் பாரிய குளங்களை அவை கொண்டிருக்கவில்லை. இத்தகைய நிலையில் நாம் நன்னீரை இங்கு இருக்கின்ற சிறு குளங்களில் தான் சேமித்து பாதுகாக்க வேண்டும்.

யாழ். குடாநாட்டு நன்னீர் பாதுகாப்பு பின்வரும் இரு வகையில் அமைந்துள்ளது. அவை பின்வருமாறு

★ நன்னீர் உவர் நீராகாமல் பாதுகாத்தல்

★ நன்னீர் மாசுபடாமல் பாதுகாத்தல்.

யாழ். குடாநாட்டில் நன்னீர் உவர் நீராகாமல் பாதுகாக்கவேண்டுமெனின் நன்னீர் சேமிப்பை அதிகரிப்பதோடு நன்னீர் சிக்கனம் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

குடாநாட்டின் நிலவமைப்பும் கடல்சூழ அமைந்துள்ளதால் உவர்நீரின் மேலே நன்னீர் வில்லைகளாக காணப்படுகின்றது.

எனவே நன்னீர் வில்லைகள் குறைவடைய உவர் நீரின் ஊடுருவல் அதிகரிக்கும் எனவே நன்னீரை சேமிக்க வேண்டும் அதனைச் சிக்கனப்படுத்த வேண்டும்.

வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றால் வரும் மழை குறைவானதாகவும் வங்காள விரிகுடாவில் ஏற்படும் தாழமுக்கத்தினால்குறைந்த காலத்தில் கூடிய மழைவீச்சி கிடைப்பதாகவும் அப்படியாகக் கிடைக்கின்ற மழைவீச்சியை திட்டமிட்டு சேமித்துப் பயன்படுத்த வேண்டுமெனவும் கூறப்படுகின்றது எனவே குடாநாட்டைப் பொறுத்தவரையில் இடையிடையே மழை கிடைக்கின்றபோது மழைநீர் இயல்பாகவே நிலக்கீழ் நீராக மாற்றப்படுகின்றது ஆனால் தாழமுக்கத்தினால் கிடைக்கும் மழைநீர் அதிகம் என்பதனால் அது கடலுடன் போய்ச் சேராது தடுத்து, நிலக்கீழ் நீராக மாற்றப்படவேண்டும்.

குடா நாட்டில் நன்னீரைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு குடிமகனும் நீரைச் சேமிப்பதில் அக்கறையுடையவராக இருக்கவேண்டும். அந்த வகையிலே மழைக் காலங்களிலே காணி எல்லைகள் தோறும் அணை அமைத்து கடலைப் போய் சேரும் நீரை நிலக்கீழ் நீராக மாற்ற வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம் நன்னீர் வில்லைகளை அதிகரிக்கச் செய்து, உவர் நீரின் ஊடுருவலைத் தவிர்க்க வேண்டும். வீணாகவே கடலைப் போய்ச் சேரும் நன்னீரை நிலக்கீழ் நீராக மாற்ற வேண்டும்.

நீர்ச்சிக்கனம் என்கின்ற போது பல்வேறு தேவையின் பொருட்டு இறைத்து, வீணாக்கப்படும் நீரின் அளவைக் குறைத்து, வேலைக்கு மாதிரமே நன்னீரைப் பயன்படுத்தவேண்டும்.

இதுவரை குடா நாட்டில் நன்னீர் உவர்நீராக மாறாமல் இருப்பதற்கான வழிவகைகளை நோக்கினோம். இனி நன்னீர் மாசுபடாமல் இருப்பதற்குரிய வழிவகைகளை நோக்குவோம்

தமிழீழத்திலுள்ள ஒவ்வொரு குடிமகனும் நன்னீர் உவர் நீராகாமல் இருப்பதில் கவனம் செலுத்துவது போல் நன்னீர் மாசுபடாமல் இருப்பதிலும் அக்கறையுடையவர்களாக இருக்க வேண்டும். அந்த வகையிலே நோக்குவோமாயின் கீழ்க்காணும் முறைகளிலே நீர் அசுத்தமாகின்றன.

★ தொழிற்சாலை கழிவுகள் நீர்நிலைகளைப் போய்ச் சேர்தல்.

★ குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் அதாவது திட்டமிட்ட முறையில் [illegible] அமைக்கப்பட்டமை.

★ நீர்நிலை[illegible]மையில் கழிவுகளைச் சேமித்தல்,

★ கிணற்றைச் சுற்றி மரங்கள் நட்டு, உரிய முறையில் கிணற்றுக்கு வலை போடாமை

இவ்வாறாக நன்னீர் மாசுபடும் நிலை காணப்படுவதனால், இதனை மாற்றுவதற்குரிய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும்.

எமது தமிழீழத்திலே நன்னீரை மாசுபடாமல் பாதுகாப்பதற்காக தொழிற்சாலைக் கழிவுகளை உரிய முறையில் வெளியகற்றி நீர் மாசுபடாமல் பாதுகாப்பதோடு மலசல கூடங்களைக் கிணற்றுக்கு குறிப்பிட்ட தூரத்தில் சுகாதார ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெற்று திட்டமிட்ட முறையில் அமைத்தல், நீர் நிலைகளிற்கு அருகாமையில் கழிவுகள் போடுவதை தவிர்த்தல், வலைகள் போடல் போன்ற பல்வேறு வழிவகைகளினால் நன்னீர் மாசுபடாமல் தடுக்கலாம்.

எனவே ஒட்டுமொத்தமாக நோக்குவோமாயின் எமது நன்னீரைப் பாதுகாப்பதற்காக மேற்கூறிய வழிமுறைகளைக் கையாள்வோமாயின் விவசாயக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட நீர்வளம் பாதுகாக்கப்படும். இதனால் எமது தற்சார்புப் பொருண்மியமும் விறுநடை போடும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ★

[illegible]

SHAMROCK
யாழ். சுண்டுக்குளி
A\L 97
கலைப் பிரிவு
பொருளியல்
திரு. இராஜேஸ்வரன்
கிறிஸ்தவம்
திருமதி A மல்லிகா
அளவையியல்
திரு. R. P. சர்மா
தமிழ் திரு. தாஸ்
நாடகமும்
அரங்கியலும்
திரு. எல்விஸ்
(36479)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்:
12
—
06
—
1932

மறைவு:
01
—
04
—
1995

திருமதி சபாரத்தினம் தங்கரத்தினம

[புன்னாலைக்கட்டுவன் தெற்கு]

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
குலம் வளர உழைத்த எங்கள் அன்புத்தாயே!
உங்கள் பிரிவால் துயருறும்

பிள்ளைகள் சிவேஸ்வரன் (சிரேஷ்ட கணக்காளர் பப்புவா நியூகினி), மனோகரன் (கனடா, முன்னாள் ஆசிரியர், Vasavilan M. M. V.), ரதிதேவி, வதனா (பிரான்ஸ்), மருமக்கள் ரோகினிதேவி (முன்னாள் சிரேஷ்ட உத்தியோகத்தர் N. S. B.), ஞானப்பூங்கோதை, பாலசுப்பிரமணியம் (ஆசிரியர் யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), கமலநாதன் (பிரான்ஸ் முன்னாள் யா/ புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி ஆசிரியர்), பேரப்பிள்ளைகள்:- ரோசிநாத், சஜநாத், பிரசாந், நிதர்ஷனா.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று 01-5-95 அவரது இல்லத்தில் நடைபெறும், அதைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

ஆஸ்பத்திரி வீதி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு (36477)

கப்பல்கள், விமானங்கள் அழிப்பு; படை நடவடிக்கையை பாதிக்காது

மக்களை அமைதிகாக்கக் கோருகிறது அரசு

கொழும்பு, மே 1

போர்க் கப்பல்கள் மற்றும் போர் விமானங்கள் என்பன விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டிருப்பது வடக்கு கிழக்கில் மேற் கொள்ளப்படும் படை நடவடிக்கைகளை எந்த வகையிலும் பாதிக்க மாட்டாது

— அரசு நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளியன்று மாலையிலும், மறுநாள் நேற்று முன்தினம் காலையிலுமாக படையினரின் இரண்டு போர் விமானங்களை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்திய சம்பவங்களை அடுத்து கொழும்பில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பகுதி மக்களினதும் பாதுகாப்பை இயன்றளவு உறுதி செய்யும் அதேவேளை எத்தகைய தாக்குதல்களையும் எதிர்நோக்கும் வகையில் படையினர் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்

விசமத்தனமான வதந்திகளை நம்பி தவறான வழியில் செல்ல வேண்டாம் என்று மக்களை அரசாங்கம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வேளையில் நாட்டு மக்கள் பூரண அமைதி காத்து ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

— இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக இலங்கை வானொலி அறிவித்தது. [ஐ-ச-14]

தலைவர் பிரபாகரனுக்கு வாசுதேவ கடிதம்

கொழும்பு, மே 1

தாக்குதலை நிறுத்தி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள வேண்டும் என வாசுதேவ நாணயக்கார பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் இனப்பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு உகந்த இனவாதம் அற்ற சூழ்நிலை ஒன்று தற்போது நிலவுகின்றது.

இதன் போது இணக்கம் காணக்கூடிய விடயங்களில் இணக்கம் காண்பதற்கு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்.

இவ்வாறு அவர் எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என மேலும் தெரிவிக்கப்பட்டது.

காங்கேசனிலும் கப்பலை தகர்ப்பதற்கு முயற்சி

கொழும்பு, மே 1

காங்கேசன்துறை கடற்படை இறங்குதுறை பகுதியில் நங்கூரமிட்டிருந்த கடற்படை கப்பலை தகர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை அந்தப்பகுதியில் சுழியோடி வந்த ஒருவரை கடற்படையினர் கண்டு சுட்டதாகவும்—

அந்தச் சுழியோடிக்கு என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை என்றும்— தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

நீர் ஊற்ற துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 1

தற்போது நிலவும் அதிக வெப்பம் காரணமாக மணற்காட்டில் நடுகை செய்த சவுக்கம் கன்றுகள் கருகுவதைத் தடுப்பதற்காக அதிக தொழிலாளரை ஈடுபடுத்தி நீர் இறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்ற வருடம் சூழல் பாதுகாப்பு நிறுவனத்தால் நடுகை செய்த 200ஏக்கர் இளம் சவுக்கம் கன்றுகளும் அதிக வெப்பத்தால் கருகுவதை அடுத்து 10மைல்களுக்கு அப்பால் உள்ள அயல் கிராமங்களில் இருந்து தொழிலாளர்களை வாகனங்கள் மூலம் தினமும் காலையில் ஏற்றிக்கொண்டு வந்து நீர் ஊற்றும் துரித நடவடிக்கையினை சூழல் பாதுகாப்பு நிறுவனம் எடுத்து வருகின்றது.

புலிகளின் குரல் வானொலியில்

01 — 05 — 1995

திங்கள் இரவு

★ 8-02 தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — தாயகப் பாடல்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி வேலணையூர் சுரேஷ் எழுதிய ''உரிமையின் குரலாய் ஒலிக்கட்டும்''

02 — 05 — 1995

செவ்வாய் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்

தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

திங்கள் மாலை

★ 5-01 — சிந்தனை [illegible]
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 புதியவை
★ 5-15 ஆழியமுதம்
★ 5-30 மாணவர் பக்கம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — நேயர் நெஞ்சம்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என் தெரிவு

அறிவியல் கழகம் இவ்வாரம் நடத்தும் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், மே. 1

மாணவர் அறிவியல் கழகம் வாரந்தோறும் நடத்திவரும் அறிவியல் பயிற்சி வகுப்புகள் மற்றும் கலந்துரையாடல்களின் வரிசையில் இவ்வாரம் நாளைமுதல் நடைபெறவுள்ள வகுப்புக்கள் வருமாறு;

செவ்வாய்

★ பிற்பகல் 3—4-30மணி வரை—கணித செயன்முறை (வட்டம்) ஆண்டு 10, 11 மாணவருக்கு.

விஞ்ஞான செயன்முறை ஆண்டு 10மாணவருக்கு.

புதன்

★ பிற்பகல் 3-4மணி— உறுப்பினர் கலந்துரையாடல்

★ பிற்பகல் 4-6மணி— விஞ்ஞான ஒளிப்படக்காட்சி உயிர் வாழும் கிரகம்—11 தொடர்ச்சி.

இயற்கைச் சமநிலை, ஆவர்த்தன அட்டவணை.

வியாழன்

★ பிற்பகல் 3—4 மணி— கணித வினா-விடை செயல்முறை— ஆண்டு 8 மாணவருக்கு.

★ பிற்பகல் 3—4.30 மணி— ஆண்டு11 மாணவருக்கு விஞ்ஞான செயன்முறை. சிறுநீரில் வெல்லம் உண்டா என அறிதல்

வெள்ளி

★ பிற்பகல் 3—4.30 மணி – ஆண்டு 8 விஞ்ஞான செயன் முறை [ஒளியியல்]

★ ஆண்டு 10, 11 கணித செயன்முறை— ''வட்டம்'' வினா-விடை வகுப்பு.

சனி

★ முற்பகல் 10—11.30 மணி— ஆண்டு9—முக்கோணிகளின் ஒருங்கிசைவு

★ பிற்பகல் 3—4.30 மணி— ஆண்டு 9 விஞ்ஞான செயன்முறை விசை இணை, வளியின் நுண்ணங்கிகள்.

திருமலையில் தமிழர்கள் வெள்ளை வானில் கடத்தல்

திருகோணமலை, மே 1

அரசுப் படைகள்— விடுதலைப் புலிகள் மோதல் மீண்டும் ஆரம்பித்திருப்பதை அடுத்து -

திருகோணமலை நகரில் இலக்கத்தகடு இல்லாத வெள்ளை நிற வானில் வந்து தமிழ் இளைஞர்களைக் கடத்திச் செல்லும் நடவடிக்கையும் மீண்டும் ஆரம்பித்திருக்கிறது.

அன்புவழிபுரம் பகுதியைச் சேர்ந்த நான்கு தமிழ் இளைஞர்கள் சில தினங்களுக்கு முன்னர் வெள்ளை நிற வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டனர்.

திருகோணமலை மாவட்டத்தில் வதிவோருக்கு திருகோணமலை மாவட்ட அடையாள அட்டைகளை வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலைத் துறைமுகப்பகுதியில் தரித்து நின்ற கடற்படைக் கப்பல்களை கடற்கரும்புலிகள் தாக்கி அழித்ததை அடுத்து—

அப்பகுதி கடற்பிராந்தியத்தில் காணப்படும் மீனவர் படகுகளை நோக்கி அடிக்கடி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருவதாகக் கூறப்படுகிறது.

இதனால் இப்பகுதி மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வதைத் தவிர்த்து வருவதாகவும்—

இதனால் திருகோணமலைப் பகுதியில் மீனின் விலை கணிசமாக அதிகரித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

கிழக்கு பல்கலை. மாணவர் மீண்டும் பகிஷ்கரிப்பு

கொழும்பு, மே 1

சம்மாந்துறையில் இயங்கி வரும் கிழக்கு மாகாண இணைப்பு பல்கலைக்கழக மாணவர்கள் மீண்டும் பகிஷ்கரிப்பு போராட்டத்தில் குதித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11மணி முதல் இவர்கள் தமது விரிவுரைகளை பகிஷ்கரித்து வருகின்றனர்.

இவர்களுக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டிருந்த சம்மாந்துறை நெல் சந்தைப்படுத்தும் ஆலைக் கட்டடத்தை வழங்க முடியாதென விவசாய காணி வன பரிபாலன அமைச்சர் டி. எம். ஜயரத்ன கடிதமூலம் அறிவித்ததை அடுத்தே மாணவர்கள் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். [ஒ-14]

சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், மே. 1

புனித வளனார் துறவற சபையினரால் நடத்தப்பட்டு வரும் எமிலியானுஸ்பிள்ளை தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சி முடித்தவர்களுக்கான சான்றிதழ், உபகரணங்கள் வழங்கும் வைபவம் நாளை மறுதினம் புதன்கிழமை மாலை 4.30மணிக்கு நடைபெறும்.

மனித முன்னேற்ற நடுநிலைய இயக்குனர் வண. எஸ். எச். ஜெபநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (ஐ)

துணுக்காய் குளம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 1

கடந்த வருடங்களில் பெய்த பெருமழையினால் சேதமுற்றிருந்த துணுக்காய் குளத்தின் புனரமைப்பு வேலைகள் தற்போது தேசநிர்மாணிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் இப் புனரமைப்பால் சுமார் 350 ஏக்கர் அடி நீரை சேமித்துவைக்கக் கூடியதாக இருக்குமென்றும் அடுத்து வரும் காலங்களில் இப்பகுதி விவசாயிகள் சிறுபோக பயிர்ச்செய்கையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. [ஐ]

முதன்மை ஆசிரியருக்கு

தென்மராட்சி, மே1

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் முதன்மை ஆசிரியர்கள் அனைவரும் நாளை இரண்டாம் திகதி கோட்ட அலுவலகத்திற்கு தவறாது சமூகம் கொடுக்குமாறு கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் அறிவித்துள்ளார். (க-117)

திரிபோஷமா வருகிறது

சண்டிலிப்பாய் மே 1

யாழ். சுகாதார திணைக்களத்திற்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் ''திரிபோஷ'' மா விரைவில்வந்து சேரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

''டோன்சர்'' கப்பலில் அடுத்த வாரமளவில் இந்த திரிபோஷ மா வந்து சேரவிருப்பதாக சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-135)

திருமலையில் புல்டோஸர் கொண்டு தமிழர்களின் 14 வீடுகள் அழிப்பு!

கொழும்பு, மே 1

திருமலை பிரிவுச் செயலகப் பகுதியில் உள்ள இலுப்பைக்குளம் அத்திமோட்டைக் கிராமத்தில் தமிழர்களின் 14 வீடுகள் சீருடை அணிந்தவர்களால் ''புல்டோஸர்'' மூலம் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது.

வீடுகளைத் தகர்க்கப் பயன்படுத்தப்பட்ட ''புல்டோஸர்'', பெரியகுளம் மீள் குடியேற்ற வேலைத் தளத்தில் இருந்து படையினரால் பலவந்தமான முறையில் எடுத்துச் செல்லப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகள் தகர்க்கப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் பீதியையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் குறித்து உடன் விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்குநட்டஈடு வழங்குமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதிக்கு அனுப்பிய அவசர தந்தியில் கேட்டுள்ளார். (ஐ)

தமிழீழத்தின் தனிச் சிறப்பை உலகம் அறிந்து கொள்ள அணிதிரள்வோம்

தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலை நசுக்குவதற்கு காலம்காலமாக சிங்கள அரசுகள் எம் மக்கள் மீது போட்டுவரும் தடைகளும், எடுத்துவரும் நடவடிக்கைகளும் அநீதியானவை, உரிமைகளுக்குப் பதிலாக சலுகைகளை வழங்கி ஒடுக்கப்பட்ட எம் இனத்தின் உரிமைப் போராட்டத்தை மழுங்கடிக்கச் செய்யலாம் எனவும் அரசு எண்ணிப்பார்க்கிறது.

ஆண்டாண்டு காலமாக ஆட்சிப்பீடமேறிய சிங்கள அரசுகளினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் என்ன நடந்தது என்பதற்குவரலாறுசான்றுபகரும். தமிழ் பேசும் மக்கள் ஏமாற்றுப் பேர்வழிகள் அல்லர்; அவர்களை ஏமாற்ற முடியாது என்பதை சிங்கள அரசு உணர வேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் எம் இனத்தின் காவலரண்கள். எல்லையில் அவர்கள் இல்லையேல் இங்கு நாம் இல்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழீழ மக்களின் விடுதலைக்கு ஆயுதம் ஏந்திப் போராட வேண்டியது என்பது விரும்பித் தெரிவு செய்யப்பட்ட மார்க்கமன்று. இதைத் தவிர வேறு வழியில்லை என்பது கண்டே இம்மண்ணில் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது

தமிழீழம்தான் எமது பிரச்சினைக்கு ஒரேயொரு வழி. அதனை எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை உலகறியும். ஸ்ரீலங்கா அரசின் திட்டமிட்ட தடைகளினால் எம் மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வரும் இவ்வேளையில் அவர்களுக்கு உதவியளிக்க எம்மக்கள் மத்தியில் அரும்பணியாற்றி வரும் அமைப்புக்கள் பல. இந்த வரிசையில் கூட்டுறவு இயக்கமும் தன்னாலான பங்களிப்பை தமிழீழ பிரதேசத்தில் ஆற்றி வருவதை யாவரும் அறிவர்.

தமிழ் மக்களில் இருந்து விடுதலைப் புலிகளை வேறுபடுத்துவதற்கில்லை, உரிமைகள் கிடைக்கும்வரை ஓயப்போவதில்லை, என்பதை தன்னிகரில்லா தலைவன் தமிழ் மக்களிற்கு வழிகாட்டி நிற்கின்றான் என்பதையெல்லாம் சர்வதேச உலகிற்கு எடுத்துக்காட்ட மே தினத்தில் கூட்டுறவாளர்கள் அனைவரும் அணிதிரள்க.

யாழ் மாவட்ட
கூட்டுறவுச்சபை

தமிழரின் சுதந்திர உரிமைகளை மே நாளில் நாம் உறுதி செய்வோம்

தமிழ் மக்களது உரிமைகளை சலுகைகள் எனக் கருதும் ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களின் நியாய பூர்வமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமல் முழு அளவிலான பொருளாதாரத் தடையை நடைமுறைப்படுத்திக் கொண்டு — பாதுகாப்பான ஒரு போக்குவரத்துப் பாதையை திறவாது சமாதானம் என்று மக்களை ஏமாற்றி எமது போராட்டத்தை நசுக்கமுயன்றது.

இந்நிலையில் அற்ப சில விடயங்களைச் செய்து விட்டு ஒரு அரசு எவ்வளவு சலுகைகளைச் செய்ய முடியுமோ அவ்வளவு சலுகைகளைச் செய்துள்ளதாக கூறியுள்ளது. இவற்றில் இருந்து ஒரு உண்மையை தமிழ் மக்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களிற்கு உரிய உரிமைகளை எந்த சந்தர்ப்பத்திலும் அரசு வழங்கத் தயாராக இல்லை.

தமிழ் மக்களையும் தமிழ் மக்களது போராட்டத்தையும் சமாதானம் எனக் கூறிக்கொண்டு இன்னுமொரு தடவை ஏமாற்ற முடியாது என்பதை ஸ்ரீலங்கா அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமையை வென்றெடுக்க வேண்டியவர்கள் நாமே என்ற உண்மையை புரிந்து கொள்ள வேண்டும். தன்னிறைவு பொருளாதாரமே ஒரு நாட்டின் சுதந்திரத்தை பெற்றுத்தரும். எனவே இத் தொழிலாளர் தினத்தில் மாணவர்களாகிய நாமும் இணைந்து தன்னிறைவு பொருளாதாரத்தை கட்டி எழுப்புவதன் மூலம் எமது சுதந்திர உரிமையை உறுதி செய்து கொள்வோம்.

யாழ். பல்கலைக்கழக
மாணவர் ஒன்றியம்

அயர்லாந்து, தென்னாபிரிக்கா முன்னுதாரணம்:

பேச்சில் முறிவு ஏற்படுவது சகஜம்; ஆயினும் சமாதானம் சாத்தியமே

வசந்தராஜா நம்பிக்கை

''சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் போது அவற்றின் இடையே முறிவுகளும், முரண்பாடுகளும் ஏற்படுவது தவிர்க்கமுடியாதவையாகவே உள்ளன. அதற்காக அந்த முரண்பாடுகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஸ்தம்பிதமடையச் செய்து விடும் எனக் கருத முடியாது. இலங்கையைப் பொறுத்தவரையில் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கக் கூடியநிலை ஏற்படும் என்றே நம்புகிறேன்.''

— ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. வசந்தராஜா இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

'சர்வதேச ரீதியாக பலஸ்தீனப் பிரச்சினை, அயர்லாந்துப் பிரச்சினை போன்றவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தென்னாபிரிக்கப் பிரச்சினைக்கும் சமாதான முயற்சிகள் மூலம் தீர்வு காணப்பட்டுள்ளது. இந்த வகையிலான சர்வதேசப் போக்கின் ஒரு பகுதிதான் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சியாகும்' எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

''வெகுஜனத் தொடர்பு சாதனங்களும், சமாதான முயற்சியும்'' என்ற பொருளில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இக்கருத்தைத் தெரிவித்தார். இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு பொரளையிலுள்ள மேற்படி நிறுவனத்தின் கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெற்றது.

வசந்தராஜா தமது உரையில் மேலும் கூறியதாவது:

''தென்னாபிரிக்காவிலும், வட அயர்லாந்திலும் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளையிட்டு நேரில் பார்வையிடுவதற்காக நாம் அங்கு சென்றிருந்தோம். தென்னாபிரிக்கா, வட அயர்லாந்து மற்றும் பலஸ்தீனப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் அந்நாடுகளில் போராட்டங்களை மேற்கொண்டிருந்த அமைப்புகள் ஆயுதப் போராட்டத்தின் மூலமாக மட்டும் வெற்றி பெற முடியாது என்பதை உணர்ந்து கொண்டன. இது நாம் கவனிக்க வேண்டிய முக்கியமானதொரு விடயமாகும்.

அதேவேளையில் அந்த நாடுகளின் அரசாங்கங்களும் இந்தப் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டன. இந்த அமைப்புக்களை ராணுவ ரீதியாக வெல்ல முடியாது என்பதையும் அவை உணர்ந்து கொண்டன. பொருளாதார ரீதியாகவும் இதற்கான செலவை அரசாங்கத்தால் தொடர்ந்தும் ஈடுசெய்ய முடியாத நிலைமை ஒன்றும் காணப்பட்டது.

அதேவேளையில் இப்பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் மக்களுடைய பார்வையிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரையில் கூட இதே போன்ற நிலை ஒன்று இங்கும் உள்ளது.

அரசாங்கத்தின் பார்வையிலும் ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. தகவல் தொடர்பு சாதனங்கள் இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துவதில் பிரதான பங்குவகித்துள்ளன.

மற்றைய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளில் கூட பரஸ்பர சந்தேகங்களை இல்லாது ஒழிப்பது கஷ்டமான ஒரு விடயமாகவே இருந்துள்ளது. இவற்றை வெற்றிகொள்வது மிகவும் முக்கியமான விடயமாகும்.

அதே போல இரண்டு தரப்பினரும் எதிர்தரப்பினர் ஒரு ரகசிய ராணுவத் திட்டத்தைக் கொண்டிருப்பதாக யுத்த நிறுத்த காலத்தில் சந்தேகிப்பதும், இவ்வாறான சமாதான முயற்சிகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவையாகவே உள்ளன.

இவ்வாறான சூழ்நிலைகளில் நம்பிக்கையை ஏற்படுத்த இருதரப்பினரும் இணக்கம் ஒன்றிற்கு வருவது அவசியமானதாகும். இதற்கு கால அவகாசம் தேவைப்படும். நம்பிக்கையைப் பெற்றுக் கொள்வதென்பது ஒரு நீண்டகாலப் பயிற்சியாகும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தாக்குதல் நிறுத்தமொன்றை ஏற்படுத்திக் கொண்டதே ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும். இது இரண்டு வாரங்களுக்கே நடைமுறையிலிருக்கும் என முதலில் கூறப்பட்ட போதிலும் கூட, பின்னர் கால வரையறையின்றி நீடிக்கப்பட்டமை மற்றொரு சாதனையாகும்.

பேச்சுவார்த்தை பற்றிய பேச்சுக்கள்

பேச்சுவார்த்தை தொடர்பான கருத்துப்பரிமாற்றங்கள் போதியளவில் இடம்பெற வேண்டும். சமாதான அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும். தென் ஆபிரிக்கா. வட அயர்லாந்து ஆகிய நாடுகளில் இவற்றுக்கு பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டன. இவற்றுக்கு இலங்கையில் கொடுக்கப்படவில்லை என்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

சமாதானப் பேச்சு வார்த்தைக்கு முன்னராக அது தொடர்பான விரிவான விவாதங்களும் பேச்சுவார்த்தைகளும் அவசியமாகும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் இது எந்தளவுக்கு இடம் பெற்றுள்ளது என்பது சந்தேகத்துக்குரிய விடயமாகும்.

தென்னாபிரிக்காவையும் வட அயர்லாந்தையும் பொறுத்தவரையில்சமாதான முயற்சிகள், யுத்த நிறுத்தம் போன்றவற்றில் பல தடவைகள் பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இலங்கையை விட மோசமான நிலை கூட அங்கு ஏற்பட்டது. எனவே இவை அனைத்தையும் அடிப்படையாகக் கொண்டு பார்க்கும் போது. இலங்கையிலும் சமாதான முயற்சி சாத்தியமாகும் என்றே எண்ணுகிறேன்.

தகவல் பரிமாற்றத்தைப் பொறுத்த வரையில் ரூபவாஹினியின் ஸ்ருடியோ ஒன்றை யாழ்ப்பாணத்தில் அமைப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல்ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கத்துடனும் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடனும் பேசினேன். யாழ்ப்பாணச் செய்திகளை உடனடியாகத் திரட்டி கொழும்புக்கு அனுப்ப ஸ்ருடியோ உதவும் என்பதாலேயே இது பற்றி ஆராயப்பட்டது — என்றார். (ஐ)

சின்னஞ் சிறு விளம்பரம்

உடன் விற்பனை

7''x4'', 6''x2'', 5''x4'' றங்கூன் தேக்கம் திராந்திகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி ப. கிருஷ்ணன், பழையஆஸ்பத்திரியடி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை (வட்டுக்கோட்டை சந்திக்கு அருகில்). [8512]

விற்பனையாகிறது

நீண்ட நாட்களாக வெளிவராமலிருந்த ஔவையார் அருளிச்செய்த ஆத்திசூடி (பதவுரை பொழிப்புரையுடன் கூடியது) கொன்றை வேந்தன், வாக்குண்டாம், அதிவீரராமபாண்டியனின் வெற்றிவேற்கை — மூலமும் தெளிவுரையுடன். வியாபாரிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் கழிவுண்டு. ஸ்ரீலங்கா புத்தகசாலை, இல. 234, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-1127)

கணிதம் - 95

Distinction Credit பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து விசேடமாக (ஆண்டு 9 10 உட்பட) வாரம் 5 மணித்தியாலங்கள் கற்பிக்கப்படும். B Sc ஆசிரியர் 85 சிவன் கோயிலடி (சிவன் கோயில் பின்பாக) திருநெல்வேலி (36464)

தேவை

தோடம்பழம், பப்பாளிப் பழம் கொள்வனவு செய்யப்படும் Taste Line Industries (Pvt) Ltd., 14, Seenier Lane, Jaffna. (சி-1101)

கணக்கியல்

பிரத்தியேக வகுப்பு

ஆரம்பம்

07 05 95

ஞாயிறு மாலை 5 00 மணி

கு. ஸ்ரீ B Com (Hons)

393/47 கோவில் வீதி

நல்லூர்

யாழ்ப்பாணம்

குறிப்பு

குறிக்கப்பட்ட அளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்பட இருப்பதனால் அனுமதிகளை முற்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். [சி/994]

பதவி வெற்றிடம்

மருந்து பால் மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது

ஆங்கில மருந்து விற்பனையாளர்

தகைமை: ஆங்கில மருந்து விற்பனையில் குறைந்தது ஒரு வருட அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம்.

வயது: 20 — 30 வருடங்கள்

சுய விபரம்: கல்வி, சான்றுகளுடன் 12 - 5 -95 க்கு முன்னர் கீழ்க் குறிப்பிடும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர்,
மருந்து, பால்மா வகைகள் (தனியார்)
வரைவுள்ளது
484, கேணல் கிட்டு சாலை,
[மருத்துவ மனை வீதி]
யாழ்ப்பாணம்.

[சி-1124]

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

0/L DAY CLASSES

காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை

✶ மீண்டும் ஓர் புதிய பிரிவு ✶

புதிய 5 ஆம் பிரிவு

ஆரம்பம்: 04 - 05 - 1995

(வியாழன்) காலை 8 30 மணி

விஞ்ஞானம் திரு. J R சூரி	கணிதம் திரு. கயாளன்
வரலாறு சமூகக்கல்வி திரு. கோபி	ஆங்கிலம் திரு. விஸ்வநாதன்
தமிழ் திரு. திருப்பதி திரு. பிரதீபன்	சமயம் திரு. N. சங்கர்
வர்த்தகம் திரு. கருணாகரன்	கிறிஸ்தவம் திரு. சிலன்
	சித்திரம் திரு. குணா

SAT, SUN CLASSES

(8 00 — 2-00)

புதிய பிரிவு (2ஆம் பிரிவு)

ஆரம்பம்: 06 - 05 - 1995

(சனி) காலை 8 00 மணி

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

[சி-1328]

எம் அன்புருவங்கள்

திருமதி
நல்லம்மா ஆறுமுகம்
இவ்வுலகில்: 1904 — 12 — 26
அவ்வுலகில்: 1986 — 05 — 19

அன்பு மிகுந்த தெய்வமே அம்மம்மா!
மும்மூன்று வருட பிரிவு போதுமம்மா!
நும் பேரனை எம் தம்பியை -
தந்திடம்மா!

செல்வன்
நடராஜா குணவதன்
மருந்தாக: 1973 - 06 - 20
அமுதாக: 1986 - 05 - 01

எம் இதயத்திலமர்ந்த அன்புருவே!
எம்முயிரினில் கலந்த தம்பியே!
அமுதே! தம்பி! ஓடோடி
வாடா!

உங்கள் நினைவினில்

மகன், மருமகன்,
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

அப்பா, அம்மா, அச்சாக்கா,
ஆசையக்கா, நண்பர்கள்,
ஆசிரியர்கள், உறவினர்கள்.

Dr V. S. நடராஜா,
சண்டிலிப்பாய்.

[36514]

பிறந்தநாள் வாழ்த்து

★ செல்வி றொஷாணா ★

இன்று தனது 21ஆவது பிறந்த தினத்தை கொண்டாடும் செல்வி றொஷாணா இரட்ணசிங்கத்தை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

[36472] - நண்பிகள்.

1995 மே நாள் மாபெரும் பேரணி

ஒரு நாள் மலரும்
நம் சின்னத் தமிழீழம்
உலகப் படத்தில்
வண்ணமாய் விரியும்.

உலகப் பந்தில்
ஓர் அதிசயப் புள்ளியாய்
வாய் பிளக்க வைக்கும்

தலைவன் காணும்
பொருண்மியக்
கனவுகளுக்கெல்லாம்
செயல் வடிவம்
கொடுப்போம்.

அனைத்து தமிழீழ மக்களையும் பேரணியில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
அரசியல்துறை.
தமிழீழ விடுதலைப் புலிகள்.

[சி-1117]

18-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 05 — 07 — 1950

ஆண்டவன் அணைப்பில்: 01 — 05 — 1977

அமரர் குமரையா தேவராஜன்

அன்பின் உருவே, பண்பின் பிறப்பிடமே
உன்னுருவம் காணாது உழலுகிறோம்
பாசமுடன் எம்முடனே பழகி வந்த நினைவுகளை
நேசமுடன் எந்நாளும் நினைத்து வாடுகிறோம்.
அன்புக் கணவராய், ஆசைத் தந்தையாய்-
எமை வாழவைத்து
ஆவியகன்று ஆண்டு பதினெட்டு ஆனாலும்
ஆறிடாது எங்கள் துயர்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,

இல. -28 றக்காலேன்,
சுண்டிக்குளி,

(36471)

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 02 — 1922

மறைவு: 12 — 05 — 1994

திருமதி நடராசா சிவஞானவல்லி

கண்ணின் மணிபோல் எமைக்காத்து வளர்த்தீர்கள் அம்மா
நீங்கள் எங்கள் குடும்பத்தின் தெய்வம் அம்மா
நீங்கள் கந்தன் கழலேகி ஓராண்டு ஆகிவிட்டதம்மா
உங்கள் உயர் குணத்தையும் எம்மீது காட்டிய
பாசத்தையும் நாம் ஒரு கணமும் மறவோம் அம்மா

உங்கள் ஆத்ம சாந்திக்காகத் தினமும்
பிரார்த்திக்கும்.

அன்புக்கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சட்டுடை,
மானிப்பாய்.

(36461)

மேதினப் பேரணி விவகாரம்:

அரசாங்கத்துக்கு எதிராக ஐ. தே.க உரிமை மீறல்மனு

கொழும்பு, மே 1

மே தினப் பேரணியை கண்டியில் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றை அரசுக்கு எதிராகத் தாக்கல் செய்யவும்—

இரண்டரைக் கோடி ரூபாவை நட்ட ஈடாகக் கோரவும் ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலை வர்த்தகக் கல்லூரி

C.C.A. பட்டப்படிப்பு பிரிவு

G A Q.	யாழ்ப்பாணம் பேராதனை	**96**
G. A Q	யாழ்ப்பாணம்	**95**

பொருளியல் — திரு. உதயன்

விரிவுரை ஆரம்பம்: 03 - 05 - 95

மாலை 5-00மணி

★ ஏற்கனவே அனுமதி பெற்றவர்களும் 03-05-95 இல் சமுகம் அளிக்கவும்.

(சி/1346)

பதவி வெற்றிடம்

வில்லியம் ஹாவே (தனியார்) மருத்துவமனை

பின்வரும் பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ✶ வைத்திய அதிகாரி
- ✶ பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரி

மேற்படி இரண்டு பதவி வெற்றிடங்களுக்கும் ஓய்வு பெற்ற வைத்தியர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் யாவும் 1995-05-12 ஆம் திகதிக்கு முன்னர் தபாலிலோ அல்லது நேரிலோ கீழ்க்காணும் முகவரிக்கு கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்கவும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பதவி வெற்றிடம்'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி,
வில்லியம் ஹாவே தனியார்
மருத்துவமனை
இல. 17, கண்டி வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

[சி-1122]

ஓராண்டு நினைவஞ்சலி

அமரர்
கணபதிப்பிள்ளை சொர்ணலிங்கம்

தாயின் மடியில்: 25-08-1937

ஆண்டவன் அழைப்பில்: 12 — 05 — 1994

திதி: 01 — 05 — 1995

காற்றும் நீரே! மழையும் நீரே!
வானும் நீரே! நிலமும் நீரே!
இந்த மண்ணில்... ...
நீர் வாழ்ந்த காலங்கள் ஐம்பத்தெட்டு ஆண்டுகள்...
எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு ஓடிவிட்டது
ஆனாலும் இன்றும் எம் நினைவுகளில் — என்றும் நீர்
காற்றும மழையும் வானும் நிலமும் உள்ளவரை
உங்கள் நினைவுகளும் எங்களோடு நிலைத்திருக்கும்.

உங்கள் நினைவோடு வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

3ஆம் கட்டை,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(36474

உதயன்
302/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

ஒருமைப்பாடு பிரதி பலிக்கட்டும்

அனைத்துலகத் தொழிலாளர் நாளான மே நாள் இன்றாகும். தொழிலாளர்களும், உழைப்பாளர்களும் அவர்களைப் பணிக்கு அமர்த்துவோரின் அடிமைகள் என்ற நிலை நீங்கிய வரலாற்றைக் குறித்து நிற்பது இந்நாளாகும்.

தமது ஜீவனோபாயத்துக்காக உழைப்பை நல்கி ஊதியம் பெறுகிறார்கள் என்பதால் தொழிலாளர்கள் உரிமைகள் எதுவும் இல்லாதவர்கள், அடிமைகள் என்ற நிலை ஒரு காலத்தில் உலகளாவிய ரீதியில் பரவியிருந்தது. பல மணி நேரம் கடினமாக உழைக்கும் தொழிலாளர்களுக்கு மிகச் சொற்பமான ஊதியம் வழங்கி முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் சுரண்டிய காலம் அதுவாகும்.

ஒருவனது உழைப்பை மற்றவன் சுரண்டுவது அநியாயம், அதனை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற உணர்வின் ஆரம்பமும், ஆக்கபூர்வமான வெளிப்பாடுமாக அமைந்தது சிக்காக்கோ போராட்டம். எட்டு மணி நேர வேலை என்ற உரிமை வென்றெடுக்கப்பட்டதைக் குறிக்கும் நாளே மே நாள்.

அதன் பின்னர், தொழிலாளர்களுக்குப் படிப்படியாக ஏகப்பட்ட உரிமைகள் கிடைத்துவிட்டன. எனினும் காலமாற்றத்துக்கு ஏற்ப இன்னும் பல உரிமைகள் கிடைக்க வேண்டியுள்ளன.

ஜனநாயகம் நிலவும் நாடுகளில் கூட நாட்டுக்கு நாடு தொழிலாளர் உரிமைகள் வேறுபட்டுள்ளன. ஒரு நாட்டுத் தொழிலாளருக்கு உள்ள உரிமை மற்ற நாட்டில் இல்லை. அரசாங்கத்துறை ஊழியருக்கும் தனியார்துறை ஊழியருக்கும் உள்ள உரிமைகளில் வேறுபாடுகள் உள்ளன.

மே நாள் 109 ஆண்டுகளாக உலக நாடுகளில் எல்லாம் கொண்டாடப்பட்டு வந்தாலும், பல நாடுகளில், பல வகைத் தொழிலாளர்களின் பூரண உரிமைகள் கிடைக்கவில்லை. அதனாலேயே தொழிற்சங்கப் போராட்டங்களும், தொழில் அமைதியின்மையும் உலக நாடுகள் பலவற்றிலும் வீட்டுக்கு வீடு வாசற்படி என்ற நிலைக்கு வந்திருப்பதைக் காணமுடிகிறது.

சர்வதேச ரீதியில், ஐ.நா. மட்டத்தில் தொழிலாளர் நலனுக்குரிய பல தொழிற் சாசனங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ள போதிலும் வசதியில்லாதவனை வசதியுள்ளவன் அடக்குமுறை செய்வதும், சுரண்டுவதும் இன்னும் மறைமுகமாகவும், நேரடியாகவும் பல மட்டங்களிலும் இருக்கவே செய்கின்றன.

ஆகையால் ஒவ்வொரு நாட்டிலும், பிரதேசத்திலும் இன்று கொண்டாடப்படும் மே நாள் விழாக்கள் அவ்வப் பகுதித் தொழிலாளர்களின் குறைபாடுகளையும், கஷ்டங்களையும் போக்கக் கோரி நடைபெறும்.

தமிழீழத்தைப் பொறுத்தவரையில் இன ஒடுக்குமுறைக்கு எதிரான, விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்த் தொழிலாளர்கள் தமக்குரிய உரிமைகளை பூரணமாக அனுபவிப்பதற்கு விடுதலைப் போராட்டம் வெற்றி பெற வேண்டும். அந்த வகையில் தொழிலாளர் பெருமக்களின் ஆதரவும் பங்களிப்பும் இன ஒடுக்குமுறைக்கு எதிரான விடுதலைப் போருக்கு அவசியமாகின்றன.

இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதனை இலக்காக வைத்தே கடந்த 6 வருடங்களாக தமிழீழப் பிரதேசங்களில் மே நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இம்மண்ணில் நடக்கும் போருக்கு தமிழ்த் தொழிலாளர்களின் ஒருமைப்பாட்டைத் தெரிவிக்கும் விதத்திலேயே இன்றைய மே நாளும் கொண்டாடப்படுகிறது. வர்க்க, தொழில் வேறுபாடின்றித் தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தில் ஓர் அணி சேர்ந்து நிற்கிறார்கள் என்பதனை இன்றைய மே நாள் விழா சந்திரிகாவுக்கும், வெளி உலகத்துக்கும் உணர்த்த வேண்டும். தமிழர்கள் வேறு விடுதலைப் புலிகள் வேறல்ல என்பதைப் பிரதிபலிக்க வேண்டும்.

திருமலை, மட்டு, வன்னி முஸ்லிம் பகுதிகளும் தனி அலகில் அடங்கும்

தமது கட்சி நிலைப்பாடு இதுவே என்கிறார் அஷ்ரப்

கொழும்பு, மே 1

இணைந்த மாகாணத்துக்குள் முஸ்லிம்களுக்கு என்று தனியான அலகு ஒன்று — அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு — அமைய வேண்டும்.

இவ்வாறு அமைக்கப்பட்ட தனியான அலகின் கீழ் வன்னி, திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்கள் முன்னேற்பாடாக இணைக்கப்பட வேண்டும்

இதுவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடாகும் — என்று அதன் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் இதனையே முன்வைக்க உள்ளோம் என்றும் அமைச்சர் அஷ்ரப் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண முற்படும் போது முஸ்லிம் காங்கிரஸ் இந்த நிலைப்பாட்டை வலியுறுத்தி நிற்கும். இதற்கான தீர்மானத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே எடுத்துள்ளது.

உத்தேச தனி அலகின் கீழ் முஸ்லிம்களின் வதிவிடங்கள் மட்டுமல்ல, விவசாய நிலம், மேய்ச்சல் காணிகள் என்பனவும் உள்ளடக்கப்படும். அது மட்டுமல்ல பராதீனப்படுத்தப்படாமல் இருக்கும் அரச காணிகளும் அந்தந்த மாவட்டங்களின் இன விகிதாசாரத்துக்கு ஏற்ப ஒதுக்கப்பட வேண்டும்.

அகதிகளாகியுள்ள முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் வாழ் முஸ்லிம்கள் மீண்டும் தம் வதிவிடங்களுக்குச் சென்று குடியேறும் பொழுது அவர்களின் சமத்துவம் பேணப்படும். மத உரிமைகள் உறுதி செய்யப்படும். இதற்கான உத்தரவாதம் அரசமைப்பில் உறுதிப்படுத்தப்படும்.

இந்த அடிப்படையிலேயே எமது தனி அலகு அம்சம் அமைந்திருக்கும்.

— இவ்வாறு அஷ்ரப் மேலும் தெரிவித்தார். (ஐ)

பலத்த பாதுகாப்பின் மத்தியில்

'சார்க்' வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டம்

புதுடில்லி. மே1

"சார்க்" வெளிவிவகார அமைச்சர்களின் இரண்டு நாள் கூட்டம் ஒன்று நேற்று புதுடில்லியில் ஆரம்பமாகியது.

எதிர்வரும் 2 ஆம் திகதி தொடங்க உள்ள "சார்க்" உச்சிமாநாட்டின் நிகழ்ச்சி நிரல் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், ஸ்ரீலங்கா, மாலைதீவு, பூட்டான், நேபாளம், இந்தியா ஆகிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்.

இக் கூட்டத்தை ஒட்டி புதுடில்லியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (க)

வியட்நாம் யுத்தத்துக்கு 20 ஆண்டுகள் நிறைவு

அமெரிக்காவிலும் நினைவுகூரல்

ஹோசிமின் நகரம், மே 1

அமெரிக்காவுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்த 20 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் வியட்நாமில் நேற்று நடைபெற்றன.

இதனை ஒட்டி முந்திய தென் வியட்நாமின் தலைநகரான சைகோனில் ராணுவ அணிவகுப்பு ஒன்று இடம்பெற்றது தலைவர்களும் முதுபெரும் ராணுவ வீரர்களும் கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு வியட்நாம் சுதந்திரப் போருக்குத் தலைமை தாங்கிய ஹோசிமின் சிலைக்கு மலர் வளையங்களை சாத்தினர்.

இதே வேளை —

வியட்நாம் யுத்த முடிவின் 20ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூரும் வைபவங்கள் அமெரிக்காவிலும் நேற்று நடைபெற்றன.

வெள்ளை மாளிகைக்கு அண்மையில் இரவு முழுவதும் விழித்திருக்கும் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது பின்னர் வியட்நாம் யுத்த நினைவுச் சின்னம் உள்ள இடத்தில் அஞ்சலி வைபவம் ஒன்றும் நடைபெற்றது. (ஐ-க)

தமிழ் ஈழத்திலிருந்து ஒலிக்கும் குரல் மேதினத்தில் உலகிற்கு கேட்கட்டும்!

மேதினம் இன்று உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. வியர்வை சிந்தி உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தினால், உரிமை மறுக்கப்படும், விடுதலைக்குப் போராடும் மக்களால் அடக்குமுறையை எதிர்த்து குரலெழுப்பும் நாளாக அது கொண்டாடப்படுகின்றது.

1806ஆம் ஆண்டு பிலடெல்பியா நகரத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். அவர்களுக்கு தலைமை தாங்கியவர்கள் மீது சதி வழக்கு வைக்கப்பட்டது. உலகின் முதற்தொழிற்சங்க இயக்கம் இதுவே. இரண்டாண்டுகளுக்குப் பின்னரே இங்கிலாந்தில் தொழிற்சங்கங்கள் தோன்றின.

1827இல் பிலடெல்பியா கட்டடத் தொழிலாளர் பத்து மணி நேர வேலைக் கோரிக்கையை முன்வைத்தனர். 1834இல் நியூயோர்க்ரொட்டித் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். அவர்கள் நாளில் 18—20 மணி நேரம் வேலை செய்யவேண்டியிருந்தது இப்போராட்டத்தின் பயனாக 1837இல் பத்து மணி நேர வேலை என்ற கோரிக்கையை வென்றெடுத்தனர். அதனைத் தொடர்ந்த பல நாட்டுத் தொழிலாளரும் இணைந்து எட்டு மணி நேர வேலை என்ற கோரிக்கையை முன்வைத்தனர். 1884இல் அமெரிக்காவில் எட்டு மணி நேர கோரிக்கை பெரும் இயக்கமாக மாறிற்று. அதுவே மேதினம் தோன்றுவதற்கு காரணமாயும் அமைந்தது.

8 மணிநேர வேலை

1866இல் தேசிய தொழிற்சங்கத்தின் முதல் மாநாடு நடைபெற்றது. அங்கே கீழ்க்காணும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"அமெரிக்கா முழுமைக்கும் எட்டு மணிநேர வேலைநாள் என்பதை சட்டமாக்கவேண்டும். அதன் மூலமே முதலாளித்துவ அடிமைத்தனத்திலிருந்து இந்நாட்டின் உழைப்பை விடுவிக்க முடியும். இந்த மாபெரும் பலனை அடைய நாம் எமது பலம் அனைத்தையும் ஒன்றுசேர்த்துப் போராடுவோம்."

1866 செப்டெம்பரில் ஜெனோவாவில் கூடிய சர்வதேச காங்கிரஸ் அக்கோரிக்கையை "வேலைநாளுக்கு சட்டபூர்வமான அளவு முதல் தேவையாகும். அது இல்லையெனில் தொழிலாளி வர்க்கத்தின் முன்னேற்றமோ விடுதலைக்கான முயற்சிகளோ முழுமையடையா. ஆகவே வேலை நாளின் சட்டரீதியான அளவு எட்டுமணிநேரமாக இருக்கவேண்டும் என்று இம்மாநாடு முன்மொழிகிறது" என விளக்கிக் கூறியது.

இந்த எட்டு மணி நேர இயக்கம் பற்றி கார்ல்மார்க்ஸ் 1867இல் எழுதிய 'மூலதனம்' என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

"அமெரிக்க ஐக்கிய குடியரசின் ஒரு பகுதியை அடிமைத்தனம் சூழ்ந்திருக்கும் வரை எல்லா சுயேச்சையான தொழிலாளர் இயக்கமும் முடங்கிக் கிடந்தன. தொழிலாளரில் ஒரு பகுதி கறுப்பு இனம் என்று முத்திரையிடப்பட்டிருக்கும் வரையும் வெள்ளை இனத் தொழிலாளர்கள் விடுதலையை அடைந்துவிட முடியாது. ஆனால் அடிமைத்தனத்தின் அழிவிலிருந்துதான் புதிய உணர்வுகள் பிறந்தன."

மறக்கமுடியா அத்தியாயங்கள்

1866 மே முதல்நாள் எட்டு மணிநேர இயக்கத்தின் உச்சத்தை அடைந்தது அமெரிக்க தொழிலாளி வர்க்கத்தின் போராட்ட வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. ஊர்வலம் சென்ற தொழிலாளர் கைதுசெய்யப்பட்டனர். அப்போராட்டம் தொடர்ந்து 3ஆம், 4ஆம் திகதிகளில் நடைபெற்றது.

மே 3ஆம் நாள் நடைபெற்ற வேலைநிறுத்தத்தை பொலீஸார் காட்டுமிராண்டித்தனத்துடன் அடக்கினர். அதனை எதிர்த்து அடுத்த நாள் 'வைக்கோல் சந்தை சதுக்கத்தில்' ஆர்ப்பாட்டம் நடந்தது.

பொலீஸ் தாக்குதலை தொடங்கியதால் கூட்டம் கலைந்தது கூட்டத்தில் எறியப்பட்ட ஒரு குண்டு இராணுவ அதிகாரியை கொன்றது. தொடர்ந்த மோதலில் ஏழு பொலீஸாரும் நான்கு தொழிலாளரும் கொல்லப்பட்டனர். தொழிலாளர் தலைவர்கள் சிறை வைக்கப்பட்டனர். சிலர் தூக்கிலிடப்பட்டனர்.

1875 இல் போராட்டத்தில் ஈடுபட்ட சுரங்கத் தொழிலாளர்களில் பத்துப்பேரை பென்சில்வேனிய சுரங்க முதலாளிகள் தூக்கிலிட்டதும் 1912 ஏப்பிரலில் சைபீரியாவில் வேலை நிறுத்தம் செய்த தங்கச் சுரங்கத் தொழிலாளர் படுகொலை செய்யப்பட்டதும் பால்டிமோரில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தொழிலாளர் [illegible] கொடூரத் [illegible] பொஸ்டன் நகரில் மேதினத்தன்று ஊர்வலத்தின் மீது நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் இன்ன பிற நிகழ்வுகளும் மேதின வரலாற்றில் மறக்க முடியா அத்தியாயங்கள்.

ஐரோப்பிய நாடுகளில்

மாற்றியமைக்கப்பட்ட இரண்டாவது சர்வதேச காங்கிரஸின் மாநாடு 1889 இல் பாரிசில் நடைபெற்றது. இம் மாநாட்டில் 'மே முதல் நாள் என்பது உலகத் தொழிலாளர் தங்கள் அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்களின் கீழ் முக்கிய அரசியல் கோரிக்கையாக எட்டு மணி நேர வேலை நாளுக்கு குரல் கொடுக்க வேண்டிய தினம்" என்று அறிவிக்கப்பட்டது. அதற்கு முன் 1884 அக்டோபர் 7 ஆம் நாள் சிகாகோவில் அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம் என்ற அமைப்பு எடுத்த முடிவே பாரிஸ் தீர்மானத்துக்கு முன்னோடியாக அமைந்தது.

1890 ஆம் ஆண்டில் பல ஐரோப்பிய நாடுகளில் மேதினம் கொண்டாடப்பட்டது. அதிகார வர்க்கத்தின் எச்சரிக்கையையும் ஒழுங்குமுறையையும் மீறி தொழிலாளர்கள் மேதினத்தை கொண்டாடினர். அமெரிக்காவின் சிகாகோவிலும் நியூயோர்க்கிலும் நடந்த ஆர்ப்பாட்டங்கள் குறிப்பிடத்தக்கவை

ரஷ்யாவில்

ரஷ்யப் புரட்சி இயக்கம் மேதினத்தை, ஜார் ஆட்சியை ஒழிக்கும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தியது. ரஷ்யாவெங்கும் நடந்த மேதின வேலை நிறுத்தங்களும் ஆர்ப்பாட்டங்களும் புரட்சிகர பிரகடனங்களும் புதிய சூழ்நிலைக்கு ரஷ்யாவை இட்டுச் சென்றன.

எஸ். பி. கே.

1917 இல் தொழிலாளரின் வெற்றி நாளான மே தினம் ரஷ்யாவில் வெற்றி நாளாகக் கொண்டாடப்பட்டது.

இலங்கை இடது சாரிகள்

தொழிலாளர் தினம் என்ற போர்வையில் இன்று தமது அரசியல் முயற்சிகளை மேம்படுத்த விழையும், இலங்கைத் தீவின் தொழிலாளரின் ஒற்றுமைக்கும் உரிமைகளுக்கும் குரல் கொடுத்து வந்த இடதுசாரிக் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் 1956 ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டத்துடன் எழுந்த இனவாதப் புயலில் [illegible] பான்மைத் [illegible] தொழிலாளர்களின் உரிமைகள் பற்றி பாரபட்சமாக நடந்து கொண்டன. இந்த நாட்டில் இடதுசாரி கட்சிகள் செய்த தவறு அவர்கள் பின்பற்றி வந்த பொதுவுடைமைக் கோட்பாட்டை அர்த்தமற்றதாக்கியது. சிங்கள அரசுகள் இந்த நாட்டில் வாழும் தமிழ் சிறுபான்மையினரை ஒவ்வொரு துறையிலும் உரிமையற்றவர்கள் ஆக்கியபோதெல்லாம் பொதுவுடைமை வாதிகள் அதற்கு எதிராகக் குரல் எழுப்பவில்லை.

தமது உரிமைகளைத் தாமே போராடிப் பெற வேண்டும் என்றுணர்ந்த தமிழ்த் தொழிலாளர்கள் 1960 களில் மொழிவழித் தொழிற்சங்கங்களை அமைத்து தமது உரிமைகளைக் கோரினர். அதே போன்று அரசியலிலும் ஜனநாயகம் பிழைத்த காரணத்தால், தமிழ் அரசியல் கட்சிகள் ஏமாற்றப்பட்டு தமிழ் இனத்தின் உரிமைகள் தொடர்ந்து மறுக்கப்பட்டு வந்த வேளை, ஒரே குரலில் "நாம் பிரிவோம் சுயாட்சி அமைப்போம்" என்ற குரல் எழுந்தது.

ஆயுதப் புரட்சி

நாடு சுதந்திரமடைந்து நாற்பத்தெட்டு ஆண்டுகள் கடந்தும் சிறுபான்மை இனங்களை அடக்கி ஆள எண்ணும் சிங்கள அரசியலாளர் உலகின் அரசியல் மாற்றங்களை அவதானித்த பின்னரும் தங்கள் பேரினவாதப் போக்கை மாற்றிக்கொள்ளாத நிலையில் தமிழ் மக்களின் ஆயுதப்புரட்சியை அடக்கிவிடலாமென எண்ணி பல்வேறு தந்திரோபாயங்களை கையாளுகின்றனர்.

நியாயமான போராட்டம் ஒன்று, நீண்டகாலம் எடுப்பினும், அதன் இலக்கை அடைந்தே தீரும் என்பதற்கு அண்மையில் சுதந்திரமடைந்த பல இனங்கள் சான்று.

இன்று உலகெங்கும் மே தினத்தைக் கொண்டாடும் தொழிலாளர் வர்க்கத்தினதும், அடக்கு முறைக்குட்பட்டுள்ள மக்களினதும் காதுகளில், தமிழீழத்திலிருந்து ஒலிக்கும் குரல் கேட்கும்.

அது, நீண்டகாலம் சிங்களப் பெரும்பான்மை இனத்தின் அடக்குமுறையின் கீழ் வாழ்ந்து வந்த தமிழினம் தமிழீழம் என்ற தன்னாட்சி உரிமையுடைய ஒரு நாட்டை வென்றெடுக்கப் போராடுகிறது, என இருக்கும். (க)

ஐ.தே.கவின் பேரணி, கூட்டம் இன்று நடைபெறமாட்டா!

சமய நிகழ்ச்சி மட்டும் நடத்த முடிவு

மே தினமான இன்று ஐக்கிய தேசியக் கட்சி பேரணியையோ, கூட்டங்களையோ நடத்த மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் இன்று மத நிகழ்ச்சிகளை மட்டும் நடத்த ஐ. தே. க. ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

தமது மே தினப் பேரணியையும், கூட்டத்தையும் கண்டியில் நடத்துவதற்கு ஐ. தே. கட்சி அனுமதி கோரியிருந்தது.

முதலில் அரசு அதற்கு அனுமதி அளிக்கவில்லை. இது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அதற்கு அனுமதி வழங்கியிருந்தார். ஆயினும் அங்கு பாதுகாப்பு வழங்க முடியாது என்று பொலீஸார் தெரிவித்தனர்.

பின்னர் பேரணி கூட்டங்கள் எதனையும் நடத்துவதில்லை என்று இறுதி நேரத்தில் ஐ. தே. க. முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

நம்வலிமை கண்டதிர்ந்து நடுங்கும் ஞாலம்

தொழிலாளர் கரங்களிலே திறன்கள் வேண்டும்
தொழில்நுட்பத் தொழில்நுணுக்க அறிவு வேண்டும்
அழியாத மனஉறுதி அகத்தில் வேண்டும்
ஆற்றலுடன் மனப்பாங்கு இணைய வேண்டும்.

வழிபாடு செய்தொழிற்கே ஆற்றல் வேண்டும்
வளங்களெலாம் உச்சமுற வைத்தல் வேண்டும்
இழிவான தொழிலில்லை எண்ண வேண்டும்
எத்தொழிலும் ஏற்றமுற வளர்க்க வேண்டும்.

பிறர்தயவை நாம்நம்பி இருப்பதில்லை(ப்)
பெருவளத்தால் நாம்யார்க்கும் அடிமை இல்லை
மறஉயர்வால் எமையாரும் வெல்வதில்லை
மாண்பிதுதான் என்று சொல்லி மகிழ வேண்டும்.

பலம்கொண்ட தமிழீழம் மலரும் காலம்
பகைசென்று பொடியாகிச் சிதறும் காலம்
நலம்கொண்ட தொழிலாளர் ஓங்கும் ஓங்கும்!
நம்வலிமை கண்டதிர்ந்து நடுங்கும் ஞாலம்.

— முருகனடியான்

உழைப்பவர் பெருநாள்

உழைப்பவர் திருநாள் - இந்த
மேதினியில் ஒரு நாள்
மே முதல் நாள் - அவர்
மேன்மை கொள் பெருநாள்.

— நிலாமகன்.

விடிவின் நாள்

பூமியெனும் மங்கை அவள்
உடல் புகுந்து
புதைந்திருந்த வளம் பலவும்
அள்ளி வந்தோர்
வானுயர்ந்த கோபுரங்கள்
சமைத்த வல்லோர்
வையத்தில் தொழில் சிறக்க
உழைத்த மேலோர்
ஏன் உயரவில்லை நாம்...?
சிந்தை செய்தார்
எழுச்சியுற்றார் புரட்சி செய்தார்
உரிமை வெல்லப்
போர் தொடுத்தார் செங்குருதி
சிந்தி நின்றார்
புதியதொரு விடிவாய் மே
தினத்தைக் கண்டார்.

— நெடுந்தீவு லக்ஸ்மன்

கொடிய நிலை மாற...!

பாடுபடும் பாட்டாளி பயனொன்றும் கண்டறியான்
பாரினிலே அவன்பாடு பலரிடமும் கையேந்தும்
கேடுகெட்ட வாழ்க்கையிது கீழ்நிலையில் வாழுகிறான்
கேட்பதற்கு வாயில்லை கைகட்டி நிற்கின்றான்
தேடியவன் உரிமைபெற சிறந்ததொரு வாழ்வுபெற
தேதியொன்று மேதனிலே தேசமெலாம் ஒன்றாக
கூடியவன் குரல்கொடுக்கக் குனிந்ததலை நிமிர
கொடிய நிலைமாறக் கொள்கை வகுத்திடுவீர்.

— வ. யோகானந்தசிவம்

பாட்டாளி வர்க்கத்தின் பூட்டறுத்த நாள்

ஓய்வின்றி உழைத்தோடாய் தேய்ந்துடல் கெட்டு
மாய்ந்து மாய்ந்து "முதலாளி" கையில்வதை பட்டு
உய்வின்றி உய்வின்றி எம்முயிரை விட்டு
உழைத்துழைத்துக் கண்டதென்ன? "ஊதியமோ" - மட்டு மட்டு
"நாளொன்றிற்கு எட்டுமணி நேரமது வேலை
நாலிரண்டு மணிநேர ஓய்வு; உயர் கூலி"
தொழிலாளர் தமதுரிமை கேட்டெழுந்த வேளை
உலகெங்கும் செஞ்சூரியன் ஒளிகொடுத்த காலை
பாட்டாளி வர்க்கத்தின் பூட்டறுந்த தென்று
கூட்டாக முரசறைந்த நாள்; மே ஒன்று!
கேட்டெழுட்டும் தமிழினம் தமதுரிமை வென்று
நாட்டிடலாம் வெற்றிக்கொடி! நம்பியெழு இன்று!

— வேலணையூர் சுரேஸ்

செந்நெறி காட்டிய தினம்

பாடுபட்டுப் பாரெங்கும்
பல்வளம் பெருக்கும் பாட்டாளி
கூடிக் கோஷம் எழுப்பும் நாள்
குவலய மெங்கும் மேதினமாம்
நாடு உயர உழைக்குமவன்
நலிவு இன்றி வாழ்வதற்கும்
தேடிய உரிமைகள் கிட்டிடவும்
செந்நெறி காட்டிய திருநாளாம்.

— வாசுகி சிவராமலிங்கம்

பருத்தித்துறைக்கு மாஹோ நேற்று வரவில்லை!

யாழ்ப்பாணம், மே 1

காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் "மாஹோ" கப்பல் நேற்றும் பருத்தித்துறைக்கு வந்து பொருள்களை இறக்கவில்லை.

நேற்று முன்தினம் காலை பருத்தித்துறைக்கு வந்து பொருள் இறக்கிக்கொண்டிருந்த இந்தக் கப்பலை நண்பகல் அளவில் கடற்படையினர் காங்கேசன்துறைக்கு திருப்பி அழைத்திருந்தனர்.

நேற்றும் இக்கப்பலை பருத்தித்துறைக்கு வந்து பொருள்கள் இறக்க படையினர் அனுமதிக்கவில்லை என்று தெரிய வந்தது.

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட "லங்கா முடித" கப்பலும் நேற்று வரவில்லை.

எனினும் —

"மாஹோ" கப்பல் பொருள்களை இறக்க துறைமுகத்துக்கு வரும் என நேற்று துறைமுக வட்டாரங்களில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. [உ 3-15-173]

பனிப்புலம் இளைஞரை இராணுவம் பிடித்ததா?

இராணுவத்தினர் பிடித்துச் சென்றதாகக் கருதப்படும் 21 வயது இளைஞரைப் பற்றிய தகவல் எதுவும் மூன்று நாள்கள் சென்றும் இன்னும் தெரியவில்லை.

பனிப்புலத்தைச் சேர்ந்த கார்த்திகேசு விஜயன் என்ற இளைஞர் கடந்த 28 ஆம் திகதி தமது வீட்டை விட்டுச் சென்றவர் இன்னமும் திரும்பி வரவில்லை.

பனிப்புலத்துக்கு முன்னேறி வந்த இராணுவம், தமது சிறியதாயாரின் மகனை சுட்டுவிட்டதாகக் கூறப்படுகிறது என்றும், தாம் அது குறித்து விசாரித்து வருவதாகவும் கூறிய இந்த இளைஞர் வீட்டைவிட்டு வெளியே சென்றார் என்று அறியப்படுகிறது.

இவரை இராணுவம் கைது செய்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் இது குறித்து முறையிடப்பட்டுள்ளது. (அ-க-135)

மரண அறிவித்தல்கள்

திருமதி சிங்கராயர் அகினேசம்மா

திருமதி சிங்கராயர் அகினேசம்மா காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர் சிங்கராயரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஜெயராசா (தபாலதிபர்), திருமதி ஜெயமணி அந்தோனிப்பிள்ளை ஆகியோரின் அன்புத்தாயாரும். திருமதி சனகமணி ஜெயராசா, காலஞ்சென்ற ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை [இராசையா மாஸ்ரர்] ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயறட்ணம் [கனடா], ஜெயபலர் (கனடா), ஜெயதேவி [ஆசிரியர் விக்னேஸ்வராக் கல்லூரி], ஜெயசீலி (லண்டன்], ஜெயசோதி [லண்டன்], ஜெயந்தி [லண்டன்], ஞானம் [கனடா] விஜி [கனடா] சிறீக்குமார் [பிரான்ஸ்] வசந்தி [கனடா], திருமதி ஜெயறட்ணம் லில்லிமலர், ஜெயசீலன் யோசவ் [கனடா] அல்பிறெட் யோசவ் [மீன்பிடி விரிவாக்க அலுவலர், யாழ்ப்பாணம்], மன்மதன் [லண்டன்], ஜெயானந்தன் [லண்டன்], இம்மானுவேல் டஸ்றியன் [லண்டன்] ஆகியோரின் பேர்த்தியாரும், திருமதி சிங்கராயர் சுவாணடப்பிள்ளையின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [1 - 5 - 95] காலை 9 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக குடும்ப சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்;

திருமதி ஜெயதேவி அல்பிறெப் யோசவ்
[பேர்த்தி]

"ஜெயமகால்"
கரவெட்டி.

[36475]

செல்லையா பாலசிங்கம்

கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும், சந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்லையா பாலசிங்கம் (முன்னாள் உதயன் ஊழியர்) 30-04-95 இல் காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், ஞானபத்மினி, ஞானபாஸ்கரன் (முன்னாள் கட்டடத் திணைக்கள உத்தியோகத்தர், தற்போது கட்டார்), ஞான ஆனந்தன் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம் வவுனியா) ஞானரஞ்சினி, ஞானமாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ப. இரத்தினசபாபதி (உதவி அதிபர், சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம், சங்கானை), நா. நகுலேந்திரன் (சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்), வதனபாஸ்கரி, அற்புதமலர் ஆகியோரின் அன்பு மாமனும், வினோஜா, பார்த்தீபா, வேணுகா, கபிலன், சாமிலா, நேருஜா, டிலக்ஷனா, லக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (01-05-95) அவரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10-00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சந்தரோடை சங்கயபுலவு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ஞான ஆனந்தன்
(மகன்)

பருத்தியோலை,
சந்தரோடை,
சுன்னாகம்.

(30476)

யாழ். குடாநாட்டில்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

வரும் மக்கள் மருதனார்மடம் சந்தியைச் சென்றடைந்து அங்கிருந்து பேரணியில் கலந்து கொள்வர்.

பேரணியில் தொழிலாளர் உரிமைகளையும், தமிழீழப் போராட்டத்தையும் சித்தரிக்கும் அலங்கார ஊர்திகள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்ளும்.

ஒவ்வொரு கோட்டத்திலிருந்தும் பல்வேறு வகையான அலங்கார ஊர்திகளை அவ்வப்பகுதி பொது நிறுவனங்களும் அமைப்புகளும் தயாரித்துள்ளன.

மே நாள் பேரணி யாழ். மருதனார்மடச் சந்தியில் இருந்து ஆரம்பித்து காங்கேசன் வீதியால் வந்து, நாச்சிமார் கோவிலடியில் திரும்பி சேர். பொன். இராமநாதன் வீதி வழியாகச்சென்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தைச் சென்றடையும்.

மே தினத்தைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நேற்று இறுதி வடிவம் பெற்றன.

மேநாள் எழுச்சிப் பேரணியை ஒட்டி மருதனார்மடம் முதல் யாழ்ப்பாணம் வரை அலங்கார வளைவுகள் பல இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

மஞ்சள், சிகப்பு கொடிகள் எங்கும் கட்டப்பட்டிருக்கின்றன.

தொழிலாளர்களின் உரிமைகளையும், ஈழப் போராட்டத்தையும் சித்திரிக்கும் வாசகங்கள் கொண்ட பதாகைகள் எங்கும் காட்சி தருகின்றன. மேதினப் பேரணிக்கு அறைகூவல் விடுத்து ஏராளமான பொது அமைப்புகள் ஆயிரக்கணக்கில் சுவரொட்டிகளை எங்கும் ஒட்டியுள்ளன.

பேரணி முடிவில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ள பல்கலைக்கழக மைதானத்தில் "மே" வடிவில் மேடை அமைக்கப்பட்டிருக்கிறது.

மேதினப் பேரணி முடிவடைந்ததும் பி. ப. 5 மணிக்குப் பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறை உறுப்பினர்கள், மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்கள் உரையாற்றுவர்

(அ-3)

மேதினப்---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தனவா என்பதை இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. க. இன்று மேதினப் பேரணியையோ, கூட்டத்தையோ நடத்துவதில்லை என ஏற்கனவே முடிவு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

முன்னைய ஏற்பாடுகள்

மே நாளை முன்னிட்டு தென்பகுதியில் இன்று 25 க்கு மேற்பட்ட பேரணிகளும், பொதுக்கூட்டங்களும் நடைபெறவிருந்தன. கொழும்பு நகரில் மட்டும் 14 பேரணிகள் இடம்பெற ஏற்பாடாகியிருந்தன.

தத்தமது மேதினப்பேரணி மற்றும் கூட்டங்களுக்கான ஏற்பாடுகளை அரசியல் கட்சிகள் மேற்கொண்டிருந்தன.

மே தினத்தை ஒட்டி தலைநகர் கொழும்பிலும் தென்பகுதியின் ஏனைய இடங்களிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"ஐக்கியமும் சமாதானமும்" என்ற கருப்பொருளில் பொ. ஐ. முன்னணி தனது இவ்வருட மேதின நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மேதின பேரணி கொழும்பு "கம்பல்" பூங்காவில் ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. அது பின்னர் ரத்துச்செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மேதினக் கூட்டம் இன்று பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு நகரசபை மண்டபத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையில் நடைபெறும்.

மக்கள் விடுதலை முன்னணியின் பேரணி கொழும்பு ஹென்றி பேதிறிஸ் பூங்காவிலும்—

மக்கள் ஐக்கிய முன்னணியின் பேரணி அதன் தலைவர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் நுகேகொடையிலும் —

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மேதின விழா பண்டாரவளையிலும் —

மலையக மக்கள் முன்னணியின் மேதின விழா நுவரெலியாவிலும் -

தொழிலாளர் தேசிய சங்கத்தின் மேதின விழா டிக்கோயாவிலும்—

இலங்கை தோட்ட தொழிலாளர் செங்கொடிச் சங்கத்தின் மேதின விழா மாத்தளையிலும்—

விவசாய தோட்ட தொழிலாளர் சங்க மேதின விழா பதுளை சேனநாயக்கா திடலிலும்—

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸின் மேதின விழா தலவாக்கலையிலும்—

இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸின் மேதின விழா ஹட்டனிலும் இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

(உ\ஐ 3-6-14)

பாக், இந்தியா காஷ்மீர் குறித்து பேச்சு

புதுடில்லி, மே 1

இவ்வாரம் புதுடில்லியில் நடைபெறவிருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் பங்குபற்ற வரும் பாகிஸ்தான் ஜனாதிபதி பாரூக் லகாரி, இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவுடன் காஷ்மீர் பிரச்சினை குறித்து பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீண்டகாலமாக இணக்கம் காணப்படாத நிலையில் உள்ள காஷ்மீர் பிரச்சினை குறித்து இரு தலைவர்களும் பேசுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-3)

கொழும்பில்---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி]

விமான நிலைய கூடத்துக்குள் அனுமதிக்கப்படும் ஆட்களின் எண்ணிக்கை கூட மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் — கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ-3-6)

வாழைச்சேனை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி[

போராளியான கப்டன் கிளி (முத்துலிங்கம் சிறிதரன் — மட்டக்களப்பு) வீரமரணமடைந்தார். (உ-3)

செல்லச்சந்நிதிப்--

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

டமானாறு வல்லை வீதிச் சந்தியில் வீசப்பட்டது. இக்குண்டு வெடிப்பில் தொண்டமானாறு வாசியான நட்சத்திரம் ஐங்கரன் (வயது 50) படுகாயமடைந்தார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

காயமுற்றவர்களில் தங்க வடிவேல் ரஞ்சனியின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று திடீரென "சுப்பர் சொனிக்" விமானங்கள் பேரிரைச்சலுடன் வட்டமிட்டு குண்டு வீசியதால் வடமராட்சி பகுதியில் காலையில் சற்று நேரம் பதற்றம் நிலவியது.

கடற்கரைப் பக்கத்திலிருந்து திடீரென வந்த "சுப்பர் சொனிக்" விமானங்கள் உயரத்திலிருந்தவாறு தாக்குதலை நடத்தி விட்டு சில நிமிடங்களில் அப்பகுதியை விட்டு மறைந்தன.

(உ- 15- 173- 155)

சடல பொதிகளுடன் 'சீ-டான்ஸர்' புறப்பாடு

வடமராட்சி, மே. 1

விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட "அவ்ரோ" விமானத்தில் பயணம் செய்த படையினரின் சிதறிய அவயவ துண்டங்கள் 54 யூரியா பைகளில் பொதி செய்யப்பட்டு "சீ டான்ஸர்" கப்பல் மூலம் நேற்று முற்பகல் அனுப்பி வைக்கப்பட்டன.

யாழ் போதனா வைத்திய சாலை சவச்சாலையிலிருந்து லொறி மூலம் எடுத்து வரப்பட்ட அவயவத் துண்டங்கள் கொண்ட பொதிகள் பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நின்ற 'சீ டான்ஸர்' கப்பலில் உடனடியாக ஏற்றப்பட்டன. யூரியா பொதிகள் துர்நாற்றம் வீசின

52 பைகளில் 52 பேரினது அவயவத் துண்டங்களும் —

ஏனைய இரு பைகளில் எந்தச் சடலத்துக்குரியது என அடையாளம் காணப்படாத ஏனைய துண்டங்களும் —

பொதிசெய்யப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வியாழன் இரவு அராலித்துறையில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட நான்கு இராணுவத்தினரினதும் சடலங்கள் நேற்று முன்தினம்(சனியன்று) சீ டான்ஸர் கப்பலில் ஒப்படைக்கப்பட்ட போதிலும் —

அவையும் சடலத் துண்டங்கள் அடங்கிய 54 யூரியா பொதிகளுடன் சேர்த்தே கொண்டுசெல்லப்படுகின்றன.

இச் சடலங்களுடன் 'சீ டான்ஸர் கப்பல் நேற்று முற்பகல் பருத்தித்துறையிலிருந்து திருகோணமலை நோக்கி புறப்பட்டுச் சென்றது [உ-173-15]

சீ-டான்ஸர் கப்பலில் அனுப்பப்பட்ட பின்னரும்

சடலங்களை மீட்டுவரும் முயற்சி பலனளிக்கவில்லை என அறிவிப்பு

கொழும்பு. மே. 1

புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட "அவ்ரோ" விமானத்தில் இருந்த படையினரின் சடலங்கள் பொதி செய்யப்பட்டு செஞ்சிலுவைச்சங்கசர்வதேசக் குழுவினரால் பொறுப்பேற்கப்பட்டு 'சீ-டான்ஸர்' கப்பல் மூலம் நேற்று மதியம் அனுப்பி வைக்கப்பட்ட பின்னரும்—

அச்சடலங்களை மீட்டுக் கொண்டு வரும் முயற்சி பலனளிக்கவில்லை என இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது.

இலங்கை வானொலிச் செய்தியில் மேலும் கூறப்பட்டதாவது:-

"அவ்ரோ" விமானம் விடுதலைப் புலிகளின் பகுதியில் வீழ்ந்ததால் உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்டுக் கொண்டு வருவதில் கஷ்டங்கள் இருப்பதாக விமானப் படை தெரிவிக்கிறது.

சடலங்களை மீட்டுக் கொண்டு வருவதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் ஒத்துழைப்புடன் பாதுகாப்பு படையினர் எடுத்த முயற்சிகள் எதுவும் பயன் அளிப்பதாக இல்லை.

விடுதலைப் புலிகளின் ஏவுகணை தாக்கியபோது அவ்ரோ விமானம் 3 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது.

ஆகவே விமானம் சுக்கு நூறாகப் போயிருக்கும் என்றும்—

அதில் பயணம் செய்தவர்களின் உடல்கள் முற்றாக சிதைந்து இருக்கும் என்றும்—

விமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். — என்று குறிப்பிடப்பட்டது.

(உ-3)

தெற்காசியாவில் பயங்கரவாதத்தை ஒழிக்க துரிததிட்டம் வகுக்கப்படும்

"சார்க்" கூட்டத்தில இணக்கம்

கொழும்பு, மே 1

தெற்காசிய பிராந்தியத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு துரித கதியிலான புதிய திட்டம் ஒன்று அமுல் செய்யப்பட வேண்டும் என்று "சார்க்" வெளிநாட்டமைச்சர்கள் இணக்கத்துக்கு வந்துள்ளனர்.

"சார்க்" வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்கள் குழு நேற்று புதுடில்லியில் ஆரம்பித்த கூட்டத்தில் இந்த இணக்கம் காணப்பட்டது

பிராந்திய நாடுகளில் வறுமையில் வாடும் நாடுகளுக்கு அடிப்படை வசதிகள் வழங்கவேண்டும் என்றும் இக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

பிராந்திய ரீதியிலான வர்த்தக உறவை புதுப்பித்தல் இந்த வாரம் நடைபெறவிருக்கும் உச்சிமாநாட்டின் முக்கிய விடயங்களில் ஒன்றாக இருக்க வேண்டும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரதாப் முகர்ஜி கேட்டுக்கொண்டார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கூட்டத்தில் இலங்கைக் குழுவுக்கு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமை வகிக்கிறார்.

[அ-3]

கற்பிட்டி கப்பல் சேவை செயலிழப்பு மன்னார் தொடர்புகள் துண்டிப்பு

கொழும்பு. மே 1

மன்னாருக்கும், கற்பிட்டிக்கும் இடையிலான கப்பல் சேவை கடந்த இருவாரங்களாக நிறுத்தப்பட்டிருப்பதால் மன்னாருக்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கடந்த 12 ஆம் திகதிக்குப் பின் வெளியூர்க் கடிதங்கள் வரவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது

கற்பிட்டிக்கும் மன்னாருக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டிருந்த "ஐரிஸ் மோனா" என்ற கப்பல் சேவையில் ஈடுபடுவதில் ஏற்பட்ட தடங்கலே இந்த நிலைக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்களுக்கும் மன்னார் தீவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

[உ-3]

உணவு முத்திரை வழங்காமலேயே நிவாரணம் விநியோகிக்க முடிவு

யாழ்ப்பாணம், மே. 1

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உணவு முத்திரையின்றியே நிவாரணம் வழங்க யாழ் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது

இடம்பெயர்ந்தவர்கள் உலர்உணவு நிவாரணம்பெறுவதற்காக வழங்கப்பட்டிருந்த உணவு முத்திரைகள் கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்துவிட்டன.

புதியமுத்திரைகள் கொழும்பில் இருந்து எடுத்து வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதை அடுத்து பழைய உணவு முத்திரை அடிக்கட்டையில் பதிந்து மார்ச் 15 ஆம் திகதி முதல் 4 வார நிவாரணத்தை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(உ-3)

துரித நடவடிக்கை

யாழ். மாவட்ட ஆசிரியர்களை புதிய அமைப்பு ரீதியிலான ஆசிரியர் சேவைத் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கான வேலைகள் துரிதகதியில் கோட்டக்கல்வி அலுவலகங்களில் நடைபெற்று வருகின்றன.

இந்த மாத முற்பகுதியில் ஆசிரியர்களின் சேவை வகுப்பு ரீதியிலான விவரங்களை மாகாணக் கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

மே-1 வெற்றிப் பேரணி
உலக உழைப்பாளிகள் தினத்தில்
ஈழத்தமிழ் தொழிலாளர் குரல் ஒலிக்கட்டும்!
மின்சார சபை ஊழியர்.
[36481]

1995 மே நாள்
தொழிலாளர் விடிவுக்காக
இன்றைய நாளில் ஒன்றிணைவோம்!
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
(சி/1129)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்[illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 228/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01 - 05 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.